

# பிறந்த ஜாதகத்தையே சரிசெய்யும் கலை

## கிரக மின்சக்தியை உடலில் இணைக்கும் கலை

+

## (Name Chart அமைக்கும் முறை)

நம்முடைய ஜாதகம் யோகமாக இல்லையே என்பவர்கள்
இந்த பொக்கிஷத்தினை ஒருமுறை படியுங்கள்.
நீங்கள் ஆனந்த பரவசம் அடைவீர்கள்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | கிரக சக்தியே மனித உடம்பை இயக்குகிறது. | 6 |
| 1. | ஜாதகம் என்பது | 10 |
| 2. | | |
| 3. | கிரக மின்சக்தியை உடலில் இணைக்கும் முறை:- பிராணாமுறை | 18 |
| 4. | இனி எந்த விரலில் எந்த சக்தி வெளியேறும் என்பது பற்றி; | 19 |
| 5. | என்ன நாளில் எக்கிரக சக்தி பூமியில் பூரணமாக இருக்கும் என்பது பற்றி | 20 |
| 6. | ஒவ்வொரு கிழமையிலும் எந்தெந்த கிரக சக்தி பூமியில் இருக்கும் என்பதன் அட்டவணை | 22 |
| 7. | விருட்ச முறை: | 23 |
| 8. | எல்லா லக்னத்தார் நடுவதற்கும் உகந்தது அரசு, வேம்பு மற்றும் வில்வம். | 31 |
| 9. | பாதரஸ முறை (CONIAL EPICZONA) | 32 |
| 10. | குழு அமைத்தல் | 33 |
| 11. | சிலை பிரதிஷ்டை | 34 |
| 12. | கிரக சக்தியை பயன் படுத்தும் ஆயிரக்கணக்கான முறைகளில் சில | 36 |
| 13. | இனி ஒவ்வொரு லக்னத்திற்கும் எந்த பிரச்சனைக்காக எந்த கிரக சக்தியை உடலில் இணைப்பது தவிர்ப்பது என்பது பற்றி விரிவாக பார்ப்போம். | 38 |
| 14. | உணவை ஏன் வாழை இலையில் சாப்பிட வேண்டும் | 65 |
| 15. | சந்தனம், மஞ்சள், குங்குமத்தின் சிறப்பு | 66 |
| 16. | கிரக சக்தி உறையும் ஸ்தலங்கள் | 68 |
| 17. | NAME CHART அமைக்கும் முறை | 78 |
| 18. | Name Chart அமைக்கும் முறையின் பின்னணியில் உள்ள சில அறிவியல் பூர்வமான உண்மைகள்:- | 81 |

## கிரக சக்தியே மனித உடம்பை இயக்குகிறது.

இந்த நூலை எழுதுவதன் முழுமுதற் காரணம் வானில் பூமியைச் சுற்றி இருக்கும் ஒன்பது கிரகங்களே மனித சரீரத்தை இயக்குகிறது. மனித உடலில் அமைந்திருக்கும் ஒவ்வொரு உறுப்பும் ஒவ்வொரு கிரக மின்சக்தியில் பிணைக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறே மனித தொடர்புகளும் கிரக மின்சக்தியின் அடிப்படையிலே தீர்மானிக்கப்பட்டுள்ளது. அண்டத்திலுள்ள கிரகசக்தியே மனித பிண்டத்தை இயக்குகிறது என்ற மாபெரும் உண்மையே தெளிவாக விளக்கி அதன் மூலம் மனித உடலை இயக்கும் கிரகசக்தியை மாற்றி அமைப்பதன் மூலம் அனைவரும் யோகமான மற்றும் நோயற்ற வாழ்வை ஏற்படுத்திக் கொள்ளமுடியும் என்பதனை ஆணித்தரமாக சொல்வதுதான் இந்நூலின் லட்சியம்.

மனித உடல் மட்டுமல்லாமல் பூமியில் உள்ள புல், பூண்டு தாவரம் மரம் வரை இயக்கப்படுவது கிரகசக்தியினாலே.

முதலில் கிரக சக்தி மனித உடம்பை எவ்வாறு இயக்குகிறது என்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்தால் மட்டுமே கிரகசக்தியை உடலில் இணைப்பதன் சூட்சமுமம் புரியும்.

பூமியை சுற்றியுள்ள கிரகங்கள் ஒன்பது அவை சூரியன், சுக்கிரன், புதன், சனி, குரு, செவ்வாய் மற்றும் ராகு, கேது ஆகும்.

இவை தவிர பிறகிரகங்கள் பூமியைச் சுற்றி இருந்தாலும் அவை மனித உடலில் தாக்கம் செலுத்துவதில்லை. மேலும் பிற கிரகங்களான யூரேனஸ், புளுட்டோ போன்ற கிரக சக்திகள் பூமியின் மீது விழுவதில்லை எனவே அவை பற்றிய கணிதம் அவசியமற்றது.

இதில் சனி கிரகத்தின் உபகிரகமான மாந்தி சிறுசிறு தாக்கங்களைத்தான் பூமியில் ஏற்ப்படுத்துவதால் இவை பற்றிய முக்கியத்துவம் அவசியமில்லை. இனி விஷயத்திற்கு வருவோம்.

சூரியன் என்ற கிரகசக்தியை அடிப்படையாக கொண்டுதான் மனித உடம்பில் கண், இருதயம் இயங்குகிறது. ஒருவருக்கு அடிக்கடி கண் வலி ஏற்பட்டால் பிரச்சனை கண்ணில் அல்ல இயக்கும் கிரக சக்தியிலேயே என்பதனை உணரவும். ஏனெனில் இவ்வாறு அடிக்கடி கண்பார்வை பாதிக்ப்படும் மனிதர்கள் பல கண் மருத்துவர்களை சந்திக்கிறார். இறுதியாக எக்கிரக மின்சக்தியினால் மேற்படிபாதிப்பு ஏற்பட்டதோ அக்கிரகமின்சக்தி அதிகம் உடைய மருத்துவரிடமோ, சித்த வைத்தியரிடமோ மஹான்களிடமோ அருகில் செல்லும் பொழுது மேற்படி கண்வலி சீக்கிரம் குணமடைகிறது. இது எவ்வாறு நிகழ்கிறது எனில் ஒருவரது உடலை இயக்கும் கிரகசக்தியானது அவரது அருகாமையில் வரும் மனிதர்களின் மீதும் தாக்கம் செலுத்துகிறது என்பதனை உணரவும்.

ஒரு ஊரில் நாற்பது கண் மருத்துவர் இருந்தாலும் நாற்பது பேரும் பிரபலமடைவதில்லை. குறிப்பிட்ட நபரே பிரபலமடைகிறார். ஏனெனில் எக்கிரக மின்சக்தியின் பாதிப்பினால் உடல் உறுப்பு பாதிப்படைகிறதோ அக்கிரக மின்சக்தியிருப்பவரின் அருகாமையில் அந்நோய் குணமாகும் என்பதனை மறந்து விடாதீர்கள்.

ஏனெனில் நோயை மருத்துவர் மட்டும் தீர்ப்பதில்லை மஹான்கள், சித்தர்கள், ஞானிகள் போன்றவர்களின் ஆசிர்வாதத்தால் எத்தனையோ நோய் குணமானவர்களை இன்றைக்கும் நம் அனுபவத்தில் பார்க்கலாம்.

ஏசுநாதர் தொழுநோயாளியை தொட்டு குணமாக்கியிருக்கிறார் சத்யசாய்பாபா எத்தனையோ நோயாளியை குணமாக்கியிருக்கிறார்.

கிரகமின்சக்தியை அடிப்படையாக வைத்து இயங்கும் உறுப்பை அம்மின்சக்தியின் மூலமே குணமடைகிறது. இதில் மருந்தின் மூலம் ஆவது வெறும் 10% சதவீதமே என்பதனை மறந்துவிடாதீர்கள்.

நம்மோடு இயற்கையில் படைக்கப்பட்டிருக்கும் காக்கை, குருவி, மாடு, எருமை இன்னும் ஏராளமான உயிரனங்கள் மருத்துவம் இன்றி வாழவில்லையா சற்று சிந்தித்து பாருங்கள்.

மனித மலங்களையே உண்டு வாழும் பன்றிகள் மிக்க உடல் ஆரோக்கியத்துடன் இருக்கிறது. ஒருவன் உடலின் உறுப்புகள் இளவயதில் பழுதடைவதும் சிலருக்கு முதுமையாகியும் கண்பார்வை தெளிவாக உள்ளதும் கிரகசக்தியின் ஏற்ற இறக்கமே காரணம்.

ஒருவனுக்கு உடலில் தீராத வியாதியிருந்தால் அவன் உறுப்பை இயக்கும் கிரகசக்தியை மீண்டும் உடலில் இணைத்தால் நலமடைவான் என்பதனை மறந்துவிடாதீர்கள். இப்புத்தகத்தின் பின்பகுதியில் கிரக மின்சக்தியை உடலில் செலுத்தி நோயை குணமாக்கியவர்களின் பேட்டியை இணைத்துள்ளேன்.

மனித உடலின் எந்த உறுப்பு பாதித்தாலும் அவ்வுறுப்பை இயக்கும் கிரகசக்தியில்தான் பிரச்சனை என்று அறியவும்.

உங்கள் அன்றாட வாழ்க்கையில் பலர் சில குறிப்பிட்ட டாக்டரிடம் காட்டினால்தான் எனக்கு நோய் குணமாகும் என்பதனை கேட்டிருப்பீர்கள் எல்லாம் கிரகசக்தியே காரணம்.

ஒரு குறிப்பிட்ட வியாதிக்கு இதுதான் மருந்து என்பது மருத்துவம் படித்த அனைவரும் அறிந்ததே ஆனால் அனைத்து மருத்துவர்களும் அவ்விதம் மருந்து கொடுத்தும் நோய் குணமாவதில்லையே ஏன்? எல்லா ஊரிலும் ஒரு குறிப்பிட்ட வியாதிக்கு சிறந்த மருத்துவர் என்ற பெயர் பெற்றவர் கொடுக்கும் மருந்தினால் அப்பெயர் வந்ததில்லை அவர் உடலை இயக்கும் கிரகத்தினால்

நடந்த மாயை. அடுத்தது சந்திரன் இக்கிரக மின்சக்தியை அடிப்படையாக கொண்டே மனித உடலின் நீர்சக்தியும் வயிற்று பாகங்களும் இயக்கப்படுகிறது.

இக்கிரக மின்சக்தி உடலில் குறைந்தால் உடலின் நீர்சக்தி பாதிக்கப்படும் வயிற்றில் ஜீரண உறுப்புகள் பாதிக்கப்படும் மேற்படி பாதிப்பு இக்கிரக மின்சக்தியுடைய மருத்துவரிடம் செல்லும்பொழுது குணமாகும் அல்லது இக்கிரக மின்சக்தியுடைய எவர் அருகாமையிலும் இப்பாதிப்பு நீங்கிவிடும்.

இக்கிரக மின்சக்தியின் குறைபாட்டின் காரணமாகவே உடலில் அல்சர் நோய் ஏற்படுகிறது. மேற்படி நோய் ஏற்படுவதன் காரணம் உணவில் அல்ல.

ஆனால் மனநிலை பாதிக்கப்படும் பொழுதும் அதிக உளைச்சல், கவலை போன்றவகளினால் அல்சர் ஏற்படுகிறது.

ஏனெனில் நம் உடலில் உள்ள மனதை சந்திரனின் கிரக சக்தியே ஆள்கிறது. எனவே மனநிலை பாதிப்பப்படும் பொழுது இக்கிரக மின்சக்தி உடலில் குறைந்துபோய் விடுகிறது. இதனால் இம்மின்சக்தியை அடிப்படையாக வைத்து இயங்கும் உறுப்பும் பாதிப்படைகிறது. இவ்வகை அல்சர்களினால் பாதிக்கப்பட்டவர்களை வெறும் இரண்டு மணி நேரத்தில் இக்கிரக மின்சக்தியை உடலில் இணைத்து சரி செய்திருக்கிறோம்.

இன்று அல்சர் நோய்க்கு சிறப்பு பெற்ற வைத்தியர், மருத்துவர் அனைவரும் சந்திரன் என்ற கிரக சக்தியை உடலில் அதிகம் உடையவர்களே.

**குரு** - இக்கிரக மின்சக்தியை அடிப்படையாக கொண்டே மனித உடம்பில் கணையம், கல்லீரல், மண்ணீரல் போன்ற உறுப்புகள் செயல்படுகிறது. மேற்ப்படி கிரக சக்தியின் குறைபாடு காரணமாக மேற்படி உறுப்பு பழுதடைகிறது.

**ராகு** - இக்கிரக மின்சக்தியினால்தான் மனித உடலில் நச்சுக்கள், கழிவுகள் சேராமல் தடுக்கப்படுகிறது. எனவே இது விஷ கிரகம் என்று அழைக்கப்படுகிறது. இக்கிரக மின்சக்தியின் குறைபாடு காரணமாகவே ரத்தத்தில் அசுத்தம் சேர்ந்து ரத்தம் கெடுகிறது. அதன் மூலம் பல்வேறு வியாதிகள் தோன்றுகிறது. மேற்படி பாதிப்புள்ளவர்கள் இக்கிரக மின்சக்தியை உடலில் இணைக்கும் பொழுது மேற்படி இரத்தம் தானாகவே சுத்தமாக்கப்படும்.

மேலும் நாம் காணும் கொசுக்கள் நமக்கு நன்மைதான் செய்கிறதேயின்றி கெடுதல் செய்வதில்லை. கொசுக்கள் மனித உடலில் இரத்தத்தில் உள்ள கழிவுகளையே இரத்தத்துடன் சேர்த்து உறிஞ்சிக் கொள்கிறது. அவை இரத்தம் குடிப்பதில்லை. மனித உடலின் கெட்ட ரத்தத்தையே கொசுக்கள் உறிஞ்சுகிறது. சுத்தமான இரத்தம் உள்ளவனை கொசு கடிப்பதில்லை மூட்டைப்பூச்சியும் அவ்வாறே.

கெட்ட ரத்தம் உள்ள ஒருவனை சணல் கயிறினால் பின்னப்பட்ட கட்டிலில் படுக்க வைத்தால் அவன் உடலில் நச்சுத்தன்மைக்கேற்ப சணல் ஒரு நுண்ணிய பூச்சியை உற்பத்தி செய்து கொள்ளும் அதுவே மூட்டை பூச்சியாகும்.

மற்றபடி ஒயர் மற்றும் வேறுவகை நூல் இவற்றினால் பின்னப்பட்ட கட்டிலில் மேற்படி மூட்டைப்பூச்சி உருவாகாது. ஒருவன் படுத்திருக்கும் கட்டிலில் அதிக அளவு மூட்டைப்பூச்சியிருந்தால் அவன் உடலில் அவ்வளவு அசுத்த இரத்தம் உள்ளது என்று பொருள். இவ்வாறு இயற்கையின் கோட்பாடுகளை புரிந்துகெள்ளாமல் நாம் இவைகளை அழித்து நம் நோயை விருத்தி செய்து கொண்டோம். இயற்கையின் படைப்பில் எல்லாம் சில காரண காரியங்களுக்காக படைக்கப்பட்டுள்ளது.

வைதிண்ணி சித்தர் பாடல் (சித்தர்கள் ஆயிரக்கணக்கில் உள்ளனர் நாம் அறிந்தது 18 சித்தர் மட்டுமே)

சணலும் முடலும்
இரத்த நாடி சுத்தியே
- என அறிவோய்.

## (முடல் - முட்டைப்பூச்சி)

இந்த மனித பிண்டத்தை ஆளும் கிரகசக்தியை கண்டு கொண்டால் அண்டத்தில் உள்ளதெல்லாம் அத்துப்படி.

## ஜாதகம் என்பது

மனித உடலில் எந்தெந்த கிரக சக்தி அதிகம் உள்ளது இல்லை என மனித பிண்டத்தை அறிய உதவும் அண்டத்தின் கையேடுதான் ஜாதகம். இந்த அண்டத்தின் கையேடு இருந்தால்தான் மனித பிண்டத்தின் செயல்பாடுகளை மாற்றியமைக்க முடியும்.

மேற்படி ஜாதகத்தினை வைத்துத்தான் மனித உடல் எந்தெந்த கிரக சக்தியினால் பிணைக்கப்பட்டுள்ளது என அறிய முடியும் அவ்வாறு அறிந்து எந்தெந்த கிரக சக்தியில்லையோ அதனை மீண்டும் உடலில் இணைத்து வாழ்வில் புத்தொளி பூக்கச் செய்ய முடியும்.

கிரக சக்தியே மனித தொடர்பினை தீர்மானிக்கிறது. எனவே ஜாதகத்தின் மூலம் எந்த கிரக சக்தி தேவையோ அதற்கேற்ப அச்சக்தியை உடலில் இணைத்து அது சம்மந்ததப்பட்ட தொடர்புகளை ஏற்ப்படுத்தி கொள்ள முடியும்.

உதாரணமாக ஒருவருக்கு குழந்தையில்லையெனில் அவர் ஜாகத்தின் மூலம் அம்மனிதர் உடலில் விந்து சக்தியை இயக்கும் கிரகம் எது என அறிந்து

அக்கிரக சக்தியை அம்மனித உடலில் இணைக்கும் பொழுது மேற்படி விந்து சக்தி மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டு புத்ரபாக்யம் ஏற்படும்.

இங்கே நீங்கள் ஒன்று கேட்கலாம் அதாவது இதுவரை நெடுங்காலமாக குழந்தையில்லாமல் குழந்தை பிறந்தவர்களெல்லாம் கிரக சக்தியை உடலில் இணைத்தா குழந்தை பெற்றெடுத்தனர்? என்று இங்கே முக்கியமாக ஒன்றை கவனிக்கவும்.

அதாவது ஒருவருக்கு நெடுங்காலமாக புத்ர பேரு இல்லாமல் குழந்தை கிடைத்திருந்தால் மேற்படி நபருக்கு எக்கிரக மின்சக்தியினால் இக்குறைபாடு ஏற்பட்டதோ அக்கிரக மின்சக்தியை உடைய மருத்துவரையோ, வைத்தியரையோ, மஹானையோ கடைசியாக சந்தித்திருக்கிறார்கள் என்று பொருள்.

ஒவ்வொரு கிரக மின்சக்திக்கும் அது உறையும் ஸ்தலங்களும் உண்டு அவ்வாறு பாதிப்படைந்த கிரகசக்தியின் ஸ்தலத்திற்கு சென்றாலும் புத்ர பேரு கிடைக்கும் என அறியவும்.

என் நோக்கமெல்லாம் என் இலட்சியமெல்லாம் இக்கிரக சக்தியினாலேயே மனித வாழ்க்கை இயக்கப்படுகிறது என்பதனை உணர்த்துவதும் அவற்றினை மதியின் வலிமையால் வெல்லுதலும்தான்.

மேலும் ஞாபகசக்தி குறைவாக உள்ள குழந்தைகளுக்கு எக்கிரக மின்சக்தியினால் மேற்படி பாதிப்பு ஏற்பட்டதோ அக்கிரக மின்சக்தியை மீண்டும் அக்குழந்தையின் உடலில் இணைத்தால் ஞாபகசக்தி பெருகி வருவதை கண்டு நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்.

இவ்வாறு மனித வாழ்க்கையில் ஏற்படும் வறுமை, புத்ரபாக்யமின்மை, திருமணமாகாமை, வழக்கு, கடன், மாந்தீரீக பாதிப்பு முதலிய எதுவானாலும் அவை எக்கிரக சக்தியினால் ஏற்பட்டது என அறிந்து அக்கிரக சக்தியை உடலோடு சேர்க்கும் பொழுது உங்களைப் பிடித்த பிணியெல்லாம் சூரியனைகண்ட பனிபோல் விலகிவிடும்.

**புதன் கிரகம்**

இக்கிரக சக்தியை அடிப்படையாகக் கொண்டே மனித உடம்பின் மொத்த நரம்புகளும் இயக்கப்படுகிறது. ஒருவருக்கு நரம்பு தளர்ச்சி ஏற்படுவதற்கு இக்கிரக மின்சக்தியே அடிப்படை காரணம்.

இன்று மிகச்சிறந்த நரம்பியல் நிபுணர்களெல்லாம் இக்கிரக மின்சக்தியை உடலில் அதிகம் உடையவர்களே எனவேதான் இவர்களிடம் செல்பவர்களும் மேற்படி கிரகசக்தியின்பால் தாக்கப்பட்டு அவர்களும் நலமடைகிறார்.

நரம்பியல் மருத்துவம் படித்து முன்னேற்றமில்லாத மருத்துவர்கள் மேற்படி கிரகசக்தியை உடலோடு இணைத்துக்கொண்டால் இக்கிரகசக்தியின்பால் பாதிக்கப்பட்டர்கள் இவரின்பால் ஈர்க்கப்படுவார்கள். அதன் மூலம் இக்கிரக சக்தியினால் பாதிப்படையும் உறுப்புகள் அவர் அருகாமையில் சரியாகி மீண்டும் சிறந்த மருத்ததுவர் என பெயரெடுக்க முடியும்.

எந்த கிரக சக்தியை நம் உடலில் அதிகப் படுத்துகிறோமோ அக்கிரக சக்தி குறைந்த மனிதர்கள் நம்பால் ஈர்க்கப்பட்டு நம்மை தேடி வருவது திண்ணம்.

உதாரணமாக புதன் என்ற கிரக சக்திக்கு உடைய தொடர்புகள் மனித உடலில் நரம்பு,உலகியலில் பத்திரிக்கை நடத்துபவர்கள், பெரும் வணிகர்கள், பெரும் வித்தைகளையுடையவர்களை குறிக்கும்.

எனவே மேற்படி கிரகசக்தியை உடலில் அதிகப்படுத்தும் பொழுது உடம்பில் நரம்புமண்டலங்கள் பலமடையும். மேற்படி பத்திரிக்கை பெரும் வணிகர், நிபுணர்கள் தொடர்புகள் நாம் இருக்கும் இடம் தேடி வரும் அதன் மூலம் நமக்கு நன்மை பெருகும்.

"கொக்கு வேட்டைக்கு செல்பவன் கொக்கை தேடிச் செல்ல வேண்டியதில்லை மீன் உள்ள குளக்கரைக்கு போனாலே போதும்" அது போல நம்மிடம் என்ன திறமை உள்ளதோ அத்திறமைக்கு எக்கிரகசக்தி அடிப்படையோ அக்கிரக சக்தியை உடலில் இணைத்தாலே போதும் அத்திறமையின்பால் தேவையுள்ளவர்கள் தானே நம்மை தேடி வருவார்கள். இப்புத்தக்தின் ஒவ்வொரு அத்தியாத்தையும் சந்தோஷமாக படியுங்கள் எனக்கு இச்செய்தியை உணர்த்திய சித்தன் எத்தனை மகிழ்ச்சியடைந்தார் தெரியுமா? நாமெல்லாம் வையத்துள் வாழ்வாங்கு வாழப் பிறந்தவர்கள்.

**சுக்கிரன்**

இக்கிரக சக்தியின் அடிப்படையிலேயே மனித உடம்பின் பாலுணர்வு உறுப்புகளும் விந்து சக்தியும் இயக்கப்படுகிறது. இக்கிரக சக்தி குறைந்தால் மேற்படி உறுப்புகள் பாதிப்படையும் விந்து சக்தி நீர்த்து போகும்.

இக்கிரக சக்தியை உடலில் அதிகம் உடையவர்களை நோக்கி பெண்கள் வசியமாகிறார்கள் இம்மின்சக்தியை அதிகம் உடைய மருத்துவர்கள் வைத்தியர்கள் பாலுணர்வு சம்மந்தப்பட்ட நோய் தீர்ப்பதில் சிறந்து விளங்குகிறார்கள்.

இக்கிரக சக்தியின் குறைபாட்டால் ஏற்பட்ட பாலுணர்வு நோய்கள் இக்கிரக சக்தி அதிகம் உடைய மனிதர்கள் அருகாமையில் குணமடைவார்கள் என்பது திண்ணம்.

இது மட்டுமல்ல எல்லா நோய்களுமே அவை ஏற்பட காரணமாக இருந்த கிரக சக்தி குறைபாட்டினை அக்கிரக சக்தி பூரணமாக உள்ள மனிதன் அருகாமையில் குணமடைவான் அத்தகைய மனிதன் மருத்துவனாகவோ, வைத்தியனாகவோ, திருநீர் மந்திரிப்பவராகவோ இப்படி யாராக வேண்டுமானாலும் இருக்கலாம்.

இக்கிரக மின்சக்தி உடலில் பாலுணர்வு உறுப்புகளையும், விந்து சக்தியினையும் எப்படி ஆள்கிறதோ அவ்வாறே உலகியலில் கவிதை, காதல், வசியம், ஆய கலைகள் அறுபத்து நான்கு, சினிமா, நாட்டியம், காமம், ஆடல், பாடல் முதலியவற்றையும் ஆள்கிறது.

மேற்க்கண்ட சினிமா, கலை, நடனம், கவிதை, காவியம் இதில் நம்மிடம் அரைகுறை திறமையிருந்தால் சுக்கிர கிரக மின்சக்தியை உடலில் இணைத்தபிறகு மேற்படி கலை முழுமை பெறும் அழகை நம்மாலே நம்ம முடியாது. அதே சமயம் இக்கிரக சக்தி உடலில் இணைந்த பிறகு இக்கிரக சக்தியின் தேவையுள்ளவர்கள் நம்பால் ஈர்க்கப்பட்டு நம்மை தட்டி எழுப்பி கோபுரமாக்குவார்கள்.

எந்த கிரக சக்தியை உடலில் இணைக்கிறாமோ அக்கிரக சக்தியின் தன்மை நம்மில் பூரணமடையும் மேலும் இக்கிரக சக்தியின்பால் முடிக்க வேண்டிய பணிகளுக்கு நம்மை வீடு தேடி வந்து கூட்டி செல்வார்கள்.

இன்று சினிமா துறையில் புகழ்பெற்று விளங்கும் அனைவரும் அத்துறையிலேயே சின்ன வயதில் இருந்து வளர்ந்தவர்களல்ல எல்லாம் அவர்களின் உடலை இயக்கிய கிரக சக்தி அத்தேவையை உடையவனை ஈர்த்து கொண்டது. அவ்வளவே.

நீங்கள் எந்த துறையில் சாதிக்க வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறதோ அத்துறையை இயக்கும் கிரக சக்தியை முதலில் உடலில் இணையுங்கள் பிறகு அத்துறையே உன் வீட்டு வாசலில் மண்டியிட்டுக் கிடக்கும்.

இன்று பலதுறையில் சாதித்த ஜாம்பவான்களெல்லாம் அவர்களின் உடலினை இயக்கிய கிரக சக்தி அத்தேவையை உடையவனை ஈர்த்துக்கொண்டு அவர்களையும் ஆளாக்கி தன்னையும் வளர்த்துக் கொண்டது.

## கேது

இக்கிரக மின்சக்தியை அடிப்படையாகக் கொண்டே மனித உடலில் தோல் பகுதிகள் இயக்கப்படுகிறது.

இக்கிரக சக்தியின் ஆளுமையை அடிப்படையாக கொண்டே ஞானம், ஞானத்தின் மூலம் வருமானம் உடைய தொழில்கள், மருந்துகடை ரசாயனம் முதலியன ஏற்படுகிறது.

## சனி

இக்கிரக மின்சக்தியை அடிப்படையாக வைத்து இயங்கும் உறுப்புகள் பல், எலும்பு.

இக்கிரக மின்சக்தியினால் ஏற்படும் பல்வலி இம்மின்சக்தி அதிகம் உடையவரின் அருகாமையில் சரியாகும்.

இக்கிரக மின்சக்தியை அதிகம் உடையவர்கள் மருத்துவராக இருந்தால் சிறந்த பல் மற்றும் எலும்பு மருத்துவராக விளங்க முடியும்.

இக்கிரக மின்சக்தியின் மூலம் இயங்கும் தொழில்கள் மிகப் பெரிய இயந்திர சாலைகளை இயக்கும் கிரகம்.

இக்கிரக சக்தி மிகவும் குறைவான நாளில் பிறந்தவர் மற்றவர்களை அண்டி பிழைக்க வேண்டியிருக்கும். மிகவும் கஷ்ட ஜீவனம் செய்ய வேண்டியிருக்கும்.

இக்கிரக சக்தியை உடலில் இணைப்பதன் மூலம் மேற்படி குறைகள் படிப்படியாக நம்மை விட்டு முற்றிலும் நீங்கும்.

## செவ்வாய்

இக்கிரக மின்சக்தியை அடிப்படையாக கொண்டே மனித உடம்பில் இரத்த நாளங்கள் செயல்படுகிறது.

இக்கிரக சக்தியினால் தொடர்புள்ள பிற உலகியல் விஷயங்களாவன;

மிகுந்த தைர்யம்,

பராக்கிரமம், வீரம்,

எதற்கும் அஞ்சாத

மனவலிமை ஆகியன

இக்கிரக சக்தியின் மூலம் தீர்மானிக்கப்படுகிறது.

இயற்கையிலேயே இக்கிரக சக்தியுடைய மனிதர்களுக்கு காவல், இராணுவம் போன்ற துறைகளில் வேலைவாய்ப்பு மிக சுலபமாக அமைகிறது.

மேலும் இக்கிரக சக்தியுடைய மனிதனைத் தேடி இன்றும் பலர் தங்கள் பிரச்சனைகளை தீர்த்துக்கொள்ள (கட்டப் பஞ்சாயத்து) அணுகுகிறார்கள் மற்றவர்கள் பிரச்சனைகளை தீர்ப்பதன் மூலம் பெரும் செல்வம் சேர்க்கின்றனர். முதலில் உங்கள் லக்னத்திற்கு யோகம் தரும் கிரக சக்தியை உடம்பில் இணையுங்கள் மற்றவை தானே நடக்கும்.

பூமியில் ஆகர்விஷ்ண சக்தியைதரும் (ஒன்பது) கிரகங்களும் ஒவ்வொரு சக்தியுள்ளவை ஒரு ஜாதகருக்கு எல்லா கிரகங்களும் நன்மையை தராது மூன்று முதல் ஐந்து கிரகம் மட்டுமே நற்பலன்கள் தருபவை.

உங்கள் லக்னத்திற்கு எந்தெந்த கிரகங்கள் நன்மையைத் தருமோ அந்த கிரக சக்தி நீங்கள் பூமியில் ஜனித்த அன்று நல்ல நிலையில் இல்லாவிட்டாலும் அக்கிரக சக்தியை இப்புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள முறையில் உடலில்

இணைத்து அக்கிரக சக்தியை மேன்மேலும் அதிகப்படுத்துங்கள் அவ்வாறு நீங்கள் செய்யும்பொழுது அக்கிரகசக்தி குறைந்த மனிதர்கள் உங்களின்பால் ஈர்க்கப்படுவார்கள் உங்கள் தேவை அவர்களுக்கு எப்பொழுது வேண்டியிருக்கும்.

உதாரணமாக உங்கள் ஏரியாவில் டீக்கடை வைத்திருக்கும் சில கடைகளில் எந்நேரமும் கூட்டம் இருக்கும். அக்கடையில் டீ குடிக்க செல்பவரை ஏன் தினமும் அந்த கடையிலேயே டீ குடிக்கிறீர்கள் என்றால் அவர் சொல்லுவார். அதாவது ''அது என்னமோ தெரியலை எனக்கு அங்க டீ குடிச்சாதான் குடிச்ச மாதிரி இருக்கும்'' என்பார். எனவே இத்தகைய மனிதர்கள் இருக்கும்வரை அந்த டீ கடை வருமானம் என்றும் நிரந்தரமாக இருக்கும் இதுபோல ஏராளமான தொழில்களுக்கு உதாரணம் தரலாம் அதனை நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் ஊரிலேயே அத்தகைய தொழில் செய்பவர்களை பார்த்திருக்கலாம்.

சிலருக்கு இயற்கையாகவே சில கிரகசக்தி பிறப்பிலேயே அமைந்துவிடும் அத்தகையவர்கள் எந்த தொழிலை செய்தாலும் அங்கே பொதுஜன ஆதரவு எப்பொழுதும் இருக்கும். அத்தகைய கிரக சக்தி பிறப்பாலேயே உடலில் அமையாதவர்கள் இப்புத்தகத்தில் கூறியுள்ளபடி உங்கள் லக்னம் எது என அறிந்து அதன்மூலம் உங்களுக்கு சகல யோகங்களையும் அளிக்கும் கிரகங்களை அறிந்து அக்கிரக சக்தியை உடலில் இணைத்து நீங்களும் அதிர்ஷ்டசாலியாக மாறுங்கள்.

முதன்முதலில் கிரகசக்தியை உடலில் இணைக்கும்பொழுது உங்களைச் சுற்றி நிறைய மாற்றங்கள் நிகழும் உங்கள் எண்ணங்கள் முன்புபோல் இல்லாமல் வேறு பரிமாண நிலைகளுக்குச் செல்லும். ஒரு பொருளை பிறர்பார்க்கும் பார்வையிலிருந்து உங்கள் கோணம் விசித்திரமாக இருக்கும் அதுவே உங்களை ஒரு புதிய உலகத்திற்கு இட்டுச் செல்லும்.

இப்புத்தகத்தில் கூறப்பட்டுள்ள கிரக மின்சக்தியை உங்களின் தேவைகளுக்கேற்ப உடலில் இணைத்துக் கொள்ளுங்கள். இதன்மூலம் ஞானம் வேண்டுபவர் ஞானத்தை நோக்கியும், வெற்றி வேண்டுபவர் வெற்றியை நோக்கியும் பொருள் வேண்டுபவர் பொருளை நோக்கியும் பயணப்படுங்கள்.

இப்புவியில் நம் எல்லோருக்கும் இறைவனால் வகுக்கப்பட்ட கர்மாக்கள் உண்டு. நாம் எதைச் செய்ய பிறப்பெடுத்தோமோ அதைச் செய்வோம் பலனை இறைவனிடம் இந்த எல்லையில்லா பிரபஞ்சத்தின் சொந்தக்காரனிடம் விட்டு விடுவோம்.

அண்டத்தில் உள்ளது பிண்டத்திலும் உள்ளது பிண்டத்தை அறிந்தால் அண்டத்தை அறியலாம்.

## கிரக மின்சக்தியை உடலில் இணைக்கும் முறை:- பிராணாமுறை

மனித உடம்பை ஒன்பது கிரக சக்திகள் இயக்குகிறது. இக்கிரக சக்திகள் மனித உடலுக்குள் காற்றின் வழியே செல்கிறது. எனவேதான் உடலுக்குள் போகும் காற்றினை நிறுத்தினால் உடல் இயக்கமும் சீர்குலைந்து மரணம் ஏற்படுகிறது.

எனவே பூமியில் எந்தநாள் எந்த நேரம் எந்த கிரக சக்தியிருக்கும் என அறிந்துகொண்டு அக்கிரகசக்தியை நாம் நம்முடைய மூச்சை ஆழ்ந்து உள்ளே இழுத்தால் அக்கிரகசக்தி உடலுக்குள் சென்றுவிடும். ஆனால் பெருமளவில் உடலில் இணையாது.

அவ்வாறு நம் சுவாசத்தின் வழியே ஈர்க்கப்பட்ட கிரக சக்தியுள்ள காற்றினை வாயை மூடிக்கொண்டு மூக்கின் வழியே ''ம்'' என்ற சப்தத்துடன் வேகமாக வெளியே விடும்பொழுது உள்ளே காற்றின் வழியே ஈர்க்கப்பட்ட கிரக சக்தியானது கை விரல் நுனிகளின் வழியே வெளியேறும் கிரகசக்தியினை தண்ணீரில் செலுத்தி மீண்டும் அத்தண்ணீரை பருகினால் கிரக சக்தி உடலில் சேர்ந்து விடும்.

பூமியில் சூரியனின் கிரகசக்தி இருக்கும் நேரத்தில் அச்சக்தியினை ஆழ்ந்து மூச்சுக்காற்றின் மூலம் உள்ளே ஈர்த்து மீண்டும் ''ம்ம்'' சப்தத்துடன் அதே சமயம் சீராக மூச்சுக்காற்றை வெளியே விடும் பொழுது இடதுகையை மூடிக்கொள்ளவும். வலது கையில் மோதிரவிரலை தவிர (சுண்டு விரலுக்கு பக்கத்துவிடல்) மற்ற விரலை மூடிக்கொண்டு மூச்சுக் காற்றை வெளியிட வேண்டும். அவ்வாறு வெளியிடும் பொழுது மோதிர விரலை நீர் நிரம்பிய தண்ணீர் பாட்டிலின் மேல் வைத்துக் கொள்ளவும். இவ்வாறு இரண்டு மூன்று முறை மூச்சுக்காற்றை ஈர்த்து ''ம்'' என்ற சப்தத்டன் வெளியிடும் பொழுது மோதிர விரலில் இக்கிரக சக்தி வெளியேறும்.

அச்சயம் மோதிர விரலை பாட்டிலின் பக்கவாட்டில் வைத்து அச்சக்தியை நீருக்குள் சேமித்து பிறகு குடித்துவிடுங்கள். உடனே இச்சக்தி உடலில் இணைந்து விடும்.

## இனி எந்த விரலில் எந்த சக்தி வெளியேறும் என்பது பற்றி;

1) சுண்டு விரலில் புதன் மற்றும் சந்திரன் கிரக சக்தி

2) பெருவிரலில் சுக்கிரனின் கிரக சக்தி

3) ஆள்காட்டிவிரலில் குரு, மற்றும் செவ்வாய் கிரக சக்தி.

4) நடுவிரலில் சனியின் கிரக சக்தி.

5) மோதிர விரலில் சூரியனின் சக்தி.

6) ராகுவின் சக்தி ராகு காலத்தில் மட்டும் மோதிர விரல் மூலம்.

# என்ன நாளில் எக்கிரக சக்தி பூமியில் பூரணமாக இருக்கும் என்பது பற்றி

## சூரியன்

1) பிரதமை திதி அன்று வரும் சூரிய ஓரை (கிரக சக்தி பூமியில் 1 மணி நேரம் இருக்கும் என்பதனை ஓரை என்று குறிப்பிடுவார்கள். அவை அடுத்த பக்கத்தில்)

2) தசமி அன்று சூரிய ஓரை

3) ஞாயிறு அன்று வரும் சூரிய ஓரை

## சந்திரன்

1) திங்கள் கிழமை சந்திர ஓரை

2) துதியை திதி அன்று வரும் சந்திர ஓரை

3) ஏகாதசி அன்று வரும் சந்திர ஓரை

## குரு

1) வியாழன் அன்று குரு ஓரை

2) திருதியை அன்று வரும் குரு ஓரை

3) துவாதசி அன்று வரும் குரு ஓரை

## ராகு

1) சதுர்த்தி அன்று வரும் ராகு காலம்

2) ஞாயிறு அன்று வரும் ராகு காலம்

3) திரயோதசி அன்று வரும் ராகு காலம்

**புதன்**

1) புதன் கிழமையில் வரும் புதன் ஓரை

2) பஞ்சமி அன்று வரும் புதன் ஓரை

3) சதுர்த்தசி அன்று வரும் புதன் ஓரை

**சுக்கிரன்**

1) வெள்ளியன்று வரும் சுக்கிர ஓரை

2) சஷ்டி அன்று வரும் சுக்கிர ஓரை

3) பௌர்ணமி அன்று வரும் சுக்கிர ஓரை

**கேது**

சப்தமி அன்று வரும் சந்திர ஓரை

**செவ்வாய்**

செவ்வாயன்று வரும் செவ்வாய் ஓரை

நவமி அன்று வரும் செவ்வாய் ஓரை

**சனி**

சனியன்று வரும் சனி ஓரை

அஷ்டமியன்று வரும் சனி ஓரை.

# ஒவ்வொரு கிழமையிலும் எந்தெந்த கிரக சக்தி பூமியில் இருக்கும் என்பதன் அட்டவணை

| மணி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|---|
| காலை | | | | | | | |
| 6 - 7 | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் | சனி |
| 7 - 8 | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு |
| 8 - 9 | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | செவ்வாய் |
| 9 - 10 | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் |
| 10 - 11 | சனி | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் |
| 11 - 12 | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் |
| பிற்பகல் | | | | | | | |
| 12 -1 | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் |
| 1 - 2 | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் | சனி |
| 2 - 3 | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு |
| மாலை | | | | | | | |
| 3 - 4 | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | செவ்வாய் |
| 4 - 5 | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் |
| 5 - 6 | சனி | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் |
| இரவு | | | | | | | |
| 6 - 7 | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் |
| 7 - 8 | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் |
| 8 - 9 | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் | சனி |
| 9 - 10 | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு |
| 10 - 11 | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | செவ்வாய் |
| 11 - 12 | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் |

நடுஇரவு

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 12 - 1 | சனி | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் |
| 1 - 2 | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் |
| 2 - 3 | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் |

விடியற்காலை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3 - 4 | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் | சனி |
| 4 - 5 | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு |
| 5 - 6 | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | செவ்வாய் |

## விருட்ச முறை: (கிரக சக்தியை உடலில் இணைக்கும் மற்றொரு முறை) மரங்களின் பிண்ணனியில் உள்ள மற்றொரு உண்மைகள்

இம்முறைப்படி கிரகசக்தியை உடலில் இணைப்பதற்கு முன் உங்கள் ஜாதகத்தினை ஒரு ஜோதிடரிடம் கொடுத்து உங்களின் ஜன்ம லக்னத்திற்கு எந்தெந்த கிரகங்கள் யோகம் தரும் என கேட்டு தெரிந்து கொண்டு அத்தகைய கிரகங்கள் மீண்டும் உங்களுடைய லக்னத்திற்கு சிறப்பான நிலையில் எப்பொழுது வரும் என கேட்டு அந்த நாளையும் அந்நாளில் நீங்கள் பிறந்த லக்னம் வரும் காலத்தையும் தெரிந்து கொண்டு அக்குறிப்பிட்ட வேளையில் பூமியில் விருட்சங்களை நட்டு அதற்கு கிரகசக்தியை ''பிரானா'' முறையில் ஈர்த்து செலுத்தப்பட்ட நீரை ஊற்றவும் பிறகு சிறிது காலத்தில் அச்செடி துளிர்க்க ஆரம்பித்ததும் அச்செடி நடப்பட்ட நேரத்திலுள்ள கிரகசக்திகள் அதற்கு முதன்முதலில் ஊற்றப்பட்ட நீரின் வழியே உங்கள் உடலில் பரவும். பிறகு அச்செடி நடப்பட்ட ஜாதகப்படியே உங்கள் வாழ்க்கை அமையும்.

அவ்வாறு விருட்சங்களை நடும் காலம் எவ்வித கிரகமும் பாதிப்படையாத நாளாகவும் செடி நடும் லக்னத்திற்கு 7, 8ஆமிடம் சுத்தமாக இருக்கும்படியும் பார்த்துக் கொள்ளவும்.

ஜோதிட கணிதம் தெரிந்தவர் தவிர மற்றவர்கள் சிறந்த ஜோதிடரை அணுகி ஆலோசனை கேட்டு பிறகே செய்யவும்.

இனி எந்த லக்னத்தார் எவ்வகை விருட்சங்களை நடுவது சிறப்பு என கீழே கூறப்பட்டுள்ளது.

## 1) மேஷ லக்னத்தார்

காஞ்சிரை
மகிழம்
வாதாங்கொட்டை
நண்டாஞ்சு
அத்தி
மருசக்கடம்பு (அ) மஞ்சக்கடம்பு
விளாமரம்
நந்தியா வட்டம்
நெல்லி
மணிபுங்கள்
வெண் தேக்கு
நரி வேங்கை

மேற்கண்ட விருட்சங்களில் ஏதாகிலும் மேஷ லகன்த்திற்கு சுப கிரகங்கள் வரும் நல்ல நாளில் நடலாம். மேற்படி விருட்சம் நடும் நேரத்தில் கிரக சக்தியை ''பிராணா'' முறையில் ஈர்த்து அச்சக்தியை நீரில் செலுத்தி பின் விருட்சத்திற்கு ஊற்றவும். மேற்படி விருட்சம் துளிர்க்க ஆரம்பித்ததில் இருந்து இதுவரை உணராத ஒரு இன்ப நிலைக்கு உங்கள் உடல் மாறுவதை நீங்கள் உணர்வீர்கள். ஏனெனில் அச்செடிக்கு முதன் முதலில் நீரை தாரை வார்த்த மனித உடலில் அச்செடி நடப்பட்ட நேரத்திலுள்ள கிரகசக்தி ஆகர்ஷணம் செய்து அதே நிலையில் ஈர்ப்புள்ள மனித தொடர்புகளை நமக்கு ஏற்படுத்தி தரும்.

## 2. ரிஷப லக்னம்

நாவல்
சிவப்பு மந்தாரை
மந்தாரை நாகலிங்கம்
கருங்காலி
அச்சாமரம்
வேம்பு
நீர்கடம்பு

மேற்க்கண்ட விருட்சங்களில் ஏதாவது ஒன்றை ரிஷப லக்னத்திற்கு சுபகிரகங்கள் நல்ல நிலையில் வரும் நாளில் நட்டு அதற்கு கிரகசக்தி செலுத்திய நீரை தாரை வார்க்கலாம்.

## 3. மிதுன லக்னம்

செங்கருங்காலி
வெள்ளைமரம்
வெள்ளெருக்கு
மூங்கில்
மலை வேம்பு
அடப்ப மரம்
நெல்லி

மேற்க்கண்ட விருட்சங்களில் ஏதாவது ஒன்றை மிதுன லக்னத்திற்கு சுபகிரகங்கள் நல்ல நிலையில் வரும் நாளில் நட்டு கிரக சக்தி செலுத்தப்பட்ட நீரை ஊற்றலாம்.

## 4. கடக லக்னம்

அரசன்
ஆச்சா
இருள்
நொச்சி
புன்னைமரம்
முசுக்கொட்டை
இலந்தை
பலாமரம்

மேற்க்கண்ட விருட்சங்களில் ஏதாவது ஒன்றை கடக லக்னத்திற்கு சுபகிரகங்கள் நல்ல நிலையில் வரும் நாளில் நட்டு கிரக சக்தியை செலுத்திய நீரை ஊற்றலாம்.

## 5. சிம்ம லக்னம்

ஆலமரம்
முத்திலா மரம்
இலுப்பை
பவள மல்லி
பலாசு
வாகை
ருத்திராட்சம்
ஆலசி
வாதநாராயண
எட்டி
புங்கள்

மேற்க்கண்ட விருட்சங்களில் ஏதாவது ஒன்றை சிம்ம லக்னத்திற்கு

சுபகிரகங்கள் நல்ல நிலையில் வரும் நாளில் நட்டு கிரக சக்தியை செலுத்திய நீரை ஊற்றலாம்.

## 6. கன்னி லக்னம்

வில்வம்
புரச மரம்
கொடுக்காய்புளி
தங்க அரளி

மேற்க்கண்ட விருட்சங்களில் ஏதாவது ஒன்றை கன்னி லக்னத்திற்கு சுபகிரகங்கள் நல்ல நிலையில் வரும் நாளில் நட்டு கிரக சக்தியை செலுத்திய நீரை ஊற்றலாம்.

## 7. துலா லக்னம்

மருது
புளி
மஞ்சள் கொன்றை
கொமுக்கட்டை
மந்தாரை
விளாமரம்

மேற்க்கண்ட விருட்சங்களில் ஏதாவது ஒன்றை துலா லக்னத்திற்கு சுபகிரகங்கள் நல்ல நிலையில் வரும் நாளில் நட்டு கிரக சக்தியை செலுத்திய நீரை ஊற்றலாம்.

## 8. விருச்சிக லக்னம்

சிம்சுபா மரம்
பூவன்
தூங்கு மூஞ்சி
மகிழம்
பூ மருது
கொங்கு மரம்
தேக்கு
பூவரசு
வேம்பு

மேற்க்கண்ட விருட்சங்களில் ஏதாவது ஒன்றை விருட்சிக லக்னத்திற்கு சுபகிரகங்கள் நல்ல நிலையில் வரும் நாளில் நட்டு கிரக சக்தியை செலுத்திய நீரை ஊற்றலாம்.

## 9. தனுர் லக்னம்

மராமரம்
பெருமரம்
செண்பகமரம்
ஆச்சா
கடற்கொஞ்சி
சந்தன
எலுமிச்சை

மேற்க்கண்ட விருட்சங்களில் ஏதாவது ஒன்றை தனுர் லக்னத்திற்கு சுபகிரகங்கள் நல்ல நிலையில் வரும் நாளில் நட்டு கிரக சக்தியை செலுத்திய நீரை ஊற்றலாம்.

## 10. மகர லக்னம்

வெள்ளெருக்கு
கருங்காளி
சிறு நாகப்பூ
பாக்குமரம்
வன்னி
கருவேல்
சீதாப்பழம்
ஜாதிக்காய்

மேற்க்கண்ட விருட்சங்களில் ஏதாவது ஒன்றை மகர லக்னத்திற்கு சுபகிரகங்கள் நல்ல நிலையில் வரும் நாளில் நட்டு கிரக சக்தியை செலுத்திய நீரை ஊற்றலாம்.

## 11. கும்ப லக்னம்

கடம்பு
பரம்பை
இராமன் சீதா மரம்
திலக மரம்
ஜாதிக்காய்
புன்னை மரம்

மேற்க்கண்ட விருட்சங்களில் ஏதாவது ஒன்றை கும்ப லக்னத்திற்கு சுபகிரகங்கள் நல்ல நிலையில் வரும் நாளில் நட்டு கிரக சக்தியை செலுத்திய நீரை ஊற்றலாம்.

## 12. மீன லக்னம்

தேமா மரம்
குங்கிலியம்
சுந்தர வேம்பு
கள்ளி மந்தாரை
வேம்பு
குல்மொஹர்
சேராங்கொட்டை
செம்மரக்கன்று
கல் மகரம்
பனைமரம்
செஞ் சந்தனம்
மஞ்ச பலாமரம்
தாளை
கடுக்காய்
சாரப் பருப்பு
மல்லி கன்று

மேற்க்கண்ட விருட்சங்களில் ஏதாவது ஒன்றை மீன லக்னத்திற்கு சுபகிரகங்கள் நல்ல நிலையில் வரும் நாளில் நட்டு கிரக சக்தியை செலுத்திய நீரை ஊற்றவும்.

### முக்கிய குறிப்பு:

1. உங்கள் லக்னம் எதுவோ அதற்கு சுபகிரகங்கள் நல்ல நிலையில் வரும் நாளில் நட வேண்டும்.

2. விருட்சம் நடும் லக்னத்திற்கு 7, 8மிடம் சுத்தமாக இருக்க வேண்டும்.

3. விருட்சங்களை [illegible] தொடர்ந்து பராமரித்து [illegible] பூமியில் இருக்கும் [illegible] சக்திகள் [illegible] பராமரிக்கவும்.

4. விருட்சத்தை பூமியில் நடுவதற்கு முன் அந்நேரத்தில் பூமியின் [illegible] முறையில் [illegible] அச்சக்திகளை நீரில் செலுத்தி அந்நீரை [illegible] ஊற்றவும்.

## 1. எல்லா லக்னத்தார் நடுவதற்கும் உகந்தது அரசு, வேம்பு மற்றும் வில்வம்.

மேற்படி விருட்சங்களை அவரவர் லக்னம் வரும் காலத்திலேயே நடப்படுதல் வேண்டும். அவ்வாறு நடப்பட்ட விருட்சத்திற்கு கிரக சக்தி செலுத்தப்பட்ட நீரை ஊற்றவும். இதன் மூலம் அம்மரம் நட்ட மனித உடம்பு அவன் வாழ்நாள் முழுவதும் அம்மரத்தில் இயங்கும் தெய்வீக சக்திகளை அடையும் அச்சக்தி தெய்வீக மனித தொடர்புகளை ஏற்படுத்தி அம்மனித வாழ்க்கையை செம்மைப்படுத்தும்.

அம்மனிதன் இறந்த பிறகும் அம்மனிதனால் நடப்பட்ட மரத்தின் சக்தியானது அம்மனிதனின் சூட்சும சரீரங்களிலும் இணைந்து நிற்கும்.

இதனாலேயே அரசமரம் நட்டவன் வம்சம் ஆயிரம் வருடம் செழிக்கும் என்று முதுமொழி வந்தது.

ஏனெனில் மனிதனின் ஸ்தூல உடல் அழிவது அது நிலையானதல்ல. ஆனால் அம்மனித உடலை இயக்கிய ஆன்மா என்றும் அழிவற்றது.

மேற்படி விருட்சம் பூமியில் நட்டவர்கள் உடல் தெய்வீக சக்திகளை பெறுவதுடன் அவர்களுக்கு பிறக்கும் சந்ததிகளும் அச்சக்திகளை பெற்று

அதன்மூலம் ஏற்படும் வம்சாவழியும் அம்மரம் புவியில் இருக்கும் காலம் வரை தழைத்து நிற்கும்.

## 2. பாதரஸ முறை (CONIAL EPICZONA) கிரக சக்தியை இணைக்கும் மற்றொரு முறை :-

எந்த கிரக சக்தியை உடலில் இணைக்க வேண்டுமோ அக்கிரகசக்தியுடைய மரங்களில் துளையிட்டு அதில் பாதரஸத்தை மெழுகில் வைத்து பிறகு துளையிட்டு அடைத்து விட்டால் பின்பு 18 நாட்களுக்கு பிறகு அப் பாதரஸத்தை எடுத்தால் அவைகட்டி மணியாகியிருக்கும் அம்மணியில் அந்த விருட்சம் எந்த கிரக சக்தியை உடையதோ அக்கிரக சக்தியை ''பிராணா'' முறையில் ஈர்த்து மீண்டும் அம்மணியில் செலுத்தி வலதுபுறம் (ஆண்) இடது புறம் (பெண்) அணிந்து கொண்டாலும் அக்கிரக சக்தி உடலில் இணைந்து விடும். இது நீடித்து பலன் தரும் முறை.

பாதரஸத்தை மெழுகில் வைத்து மரத்தில் வைக்கும் நேரம் அவரவர் லக்னத்திற்கு சுபகிரகங்கள் நல்லநிலையில் வரும் காலத்தில் செய்ய வேண்டும்.

இம்முறையில் பாதரஸமணியை நீங்கள் செய்ய வேண்டாம். ஏனெனில் அதனை சுத்திகரிக்கும் முறை பலருக்கு விளக்கினாலும் புரியாது. எனவே இம்மணியை கட்டத் தெரிந்த நபரிடம் செய்து வாங்கிகொண்டு பிறகு கிரக சக்தியை நீங்களே ''பிராணா'' முறையில் செலுத்தி அணிந்து கொள்ளலாம். கிரக சக்தியை உடலில் இணைக்கும் முறைகளில் இதுவும் சிறந்ததாகும்.

பாதரஸம் அனைத்து கிரக சக்தியையும் நீண்டகாலம் தன்னுள் சேமித்துவைக்கும் தன்மை கொண்டது. பொதுவாக அரசமர விருட்சத்தில் செய்த பாதரஸ மணியில் அனைத்து கிரக சக்தியையும் சேமிக்கலாம்.

### 3. குழு அமைத்தல் (கிரக சக்தியை இணைக்கும் மற்றொரு முறை :-

நீங்கள் ஜனித்த லக்னத்திற்கு எந்தெந்த யோக கிரகங்கள் பலமில்லையோ அத்தகைய கிரகங்கள் பலமடைந்துள்ள நபர்களை உங்களின் நண்பராக்கி கொள்ளுங்கள். (அவர்கள் நீங்கள் ஜனித்த லக்னத்திலேயே ஜனித்திருக்க வேண்டும்.)

ஒரு மனித உடலை இயக்கும் கிரக சக்தியானது அவன் அருகில் இருக்கும் மனித உடம்பிலும் தாக்கம் செலுத்தும் என்பதை மறந்து விடாதீர்கள்.

நீங்கள் மிதுன லக்னத்தில் ஜனித்திருந்தால் இதே லக்னத்தில் பிறந்த பல நண்பர்களை தினமும் சந்தியுங்கள். உங்கள் நிறுவனத்தில் பணிபுரியும் அனைவரையும் உங்கள் லக்னத்தில் பிறந்தவர்களையே வேலையில் அமர்த்திக் கொள்ளுங்கள்.

ஆனால் அப்படி அமைத்துக்கொள்ளும் பொழுது அவர்கள் ஜாதகம் ஓரளவிற்கு யோகம் உடையதாக பார்த்து சேர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிறுவனத்தில் எந்த பணியில் தேக்கம் உள்ளதோ அப்பணியில் அமர்த்தப்பட்டவர்களை மாற்றிவிட்டு உங்கள் லக்னத்தில் பிறந்து ஓரளவிற்கு யோக ஜாதகம் உள்ளவர்களை இணைத்துக் கொண்டால் அப்பணியின் தேக்கம் உடனே தீரும்.

உங்களால் முடிந்தால் உங்கள் லக்னத்தில் பிறந்தவர்களை 100 பேர்களை ஒரு குழுவாக அமைத்து சிறிது நேரம் அமைதியாக அமர்ந்திருந்தாலே ஒருவருக்கு உள்ள கிரகசக்தியின் குறைபாடு நிச்சயம் மேற்படி 100 பேரில் யாருக்காவது இருந்தால் மற்றவர் உடலில் இணைந்து விடும்.

இக்குழுவை அமைக்கும் முன் பெரும்பாலும் ஓரளவிற்கு யோக ஜாதகத்தினை பார்த்து அமைத்துக் கொள்ளவும். இம்முறை உங்களுக்கு சாத்தியப்பட்டால் என்றுமே நீங்கள் வெற்றியாளர் தான்.

இக்கூட்டத்தினை வாரம் ஒருமுறை கூட்டினால் மிக மேலான பலனை அடையலாம்.

நீங்கள் புதிதாக தொழில் தொடங்குபவராக இருந்தால் உங்கள் லக்னத்திற்கு 10க்குடைய கிரகசக்தி பலமாக உள்ள நபர்களை (உங்கள் லக்னத்தில் ஜனித்தவர்களை) கூட்டாக சேர்த்து தொழிலை ஆரம்பித்தால் அது எது சம்மந்தப்பட்ட தொழிலாக இருந்தாலும் மிக மேன்மையான பலனைத் தரும்.

## 4. சிலை பிரதிஷ்டை

இதற்கு விநாயகர் கோவிலே ஏற்றது. உங்கள் லக்னம் எதுவோ அந்த லக்னத்திற்கு சுப கிரகங்கள் நல்ல நிலையில் வரும் நாளில் விநாயகர் கோவில் கட்டி அதில் விநாயகர் சிலையை பிரதிஷ்டை செய்துவிடவும். (இதனை உங்கள் லக்னம் எதுவோ அந்த லக்னம் வரும் காலத்தில் மட்டுமே சிலை பிரதிஷ்டை செய்யப்படுதல் வேண்டும்.

ஆனால் உங்கள் லக்னத்திற்கு பொருந்தாத ஒருவர் மேற்படி கோவிலுக்கு சென்றால் பாதிப்பது உறுதி. அது உங்கள் குடும்ப உறுப்பினராக இருந்தாலும் சரி. இது சிறந்த முறை ஆனால் நன்கு ஆலோசனை கேட்டு செய்யவும். அம்மன் சிலைகளையும் பிரதிஷ்டை செய்யலாம்.

மேலும் இக்கோவிலை நீங்கள் மட்டும் வழிபடும் கோவிலாக சிறிய அளவில் கட்டி வழபடுங்கள் மிக அற்புதமான பலன்களை உண்டாகும்.

ஆனால் இது மிக செலவு வைக்கும் முறை சாத்தியப்படுபவர்கள் செய்யுங்கள். இதுவே மிகவும் தலைசிறந்த முறையாகும். இக்கோவிலை

பொதுக்கோயில் ஆக்கினால் அக்கோவிலின் சிலை எந்த லக்னத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டதோ அந்த லக்னத்தார் மட்டுமே வழிபடும் ஸ்தலமாகவும் மாற்றலாம்.

சற்று சிரமம் தான் முயன்று பாருங்கள் முயன்றால் முடியாதது எதுவுமில்லை.

உதாரணமாக கடக லக்னத்தில் அம்மன் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டால் அச்சிலை பிரதிஷ்டை செய்யப்பட்ட லக்னம் தான் கோவிலின் ஜாதகம்.

அக்கோவிலில் நடப்படும் செடிகள் அனைத்தும் கடக லக்னம் வரும் காலத்தில் மட்டுமே அமைக்கவும். மேலும் கடக லக்னத்திற்கு யோகம் தரும் கிரகங்கள் மிக நல்ல நிலையில் உள்ள நாளில் இதை செய்து விட்டால் போதும். மேற்படி ஸ்தலத்திற்கு கடக லக்னத்தில் பிறந்து கஷ்டப்படுபவர்கள வாரம் ஒருமுறை அக்கோவிலுக்கு சென்று வந்தால் மிக அற்புதமான முறையில் வாழ்க்கை அமையும்.

இனி தமிழ்நாட்டில் அமைக்கும் அனைத்து ஸ்தலத்திற்கும் அக்கோவிலின் மூலவர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்ட நேரத்தைக் கொண்டு கோவிலின் ஜாதகம் கோவில் வெளியே மாட்டி வைப்பது அது சம்மந்தப்பட்ட லக்னத்தாருக்கு மிக மேலான பலனைத் தருவதோடு மற்ற லக்னத்தார்கள் அக்கோவில் செல்வதை தவிர்த்துக் கொள்ளலாம்.

ஒவ்வொரு ஏரியாவிலும் குடியிருக்கும் ஒரே குறிப்பிட்ட லக்னத்தார்கள் ஒன்று சேர்ந்து கோவில் எழுப்பி அதே லக்னத்தில் சிலையையும், கோவில் விருட்சங்களையும் அமைத்து வாரம் ஒரு முறை சென்று வழிபட்டு மிக மேலான பலன்கள் அடையலாம்.

கோவிலின் யோக பலன்கள் அனைத்துக்கும் அவை அமைக்கப்பட்ட லக்னத்தின் யோக பலனை பொருத்தே அமையும் எனவே சிலை பிரதிஷ்டை

செய்யும் லக்னமும் அந்த லக்னத்திற்கு சுபகிரங்கள் நல்ல நிலையில் வரும் காலமும் மிகவும் இன்றியமையாதவை.

## கிரக சக்தியை பயன் படுத்தும் ஆயிரக்கணக்கான முறைகளில் சில

1. நீங்கள் புதுமண தம்பதிகளாக இருந்தால் உங்களின் இருவரின் ஜாதகத்திற்கும் பொருந்தும் லக்னத்தை தேர்ந்தெடுத்து அந்த லக்னத்திற்கு யோகமான கிரகங்கள் நல்ல நிலையில் வரும் நாளில் மேற்படி லக்ன நேரத்தில் தாம்பத்ய உறவு கொள்ளுங்கள் ஒவ்வொரு நாளும் அதே லக்ன நேரத்தில் தாம்பத்யம் கொள்ளவும். ஆனால் ஏதோவது ஒரு நாளில் மேற்படி லக்னத்திற்கு கிரகங்கள் நல்ல நிலையில் இல்லாவிட்டால் தாம்பத்யம் அன்று மட்டும் தவிர்க்கவும்.

இம்முறையில் உருவாகும் குழந்தை பிறந்தவுடன் அவ்வீடு செல்வச் செழிப்படையும் என்பதில் சந்தேகமில்லை.

2. நீங்கள் மணமகனோ, மணமகளோ வரன் தேடுபவர்களாக இருந்தால் அத்தகைய மணமகன் மணமகள் பிறந்த லக்னத்திற்கு எந்த கிரகங்கள் பலமில்லையோ அத்தகைய கிரகங்கள் பலமுள்ள அதே லக்னம் அல்லது அந்த லக்னத்திற்கு பொருந்தும் லக்னமாக பார்த்து மணமுடிக்கவும். இதனால் திருமணத்திற்கு பிறகு வாழ்க்கை மிக மேன்மையான முறையில் அமையும்.

3. நீங்கள் பிறந்த லக்னத்திற்கு யோகமுள்ள கிரகங்கள் பலமில்லாமல் இருந்தால் மீண்டும் உங்கள் லக்னம் வரும் நாளில் மேற்படி யோகமுள்ள கிரகங்கள் நல்ல நிலையில் இருந்தால் அந்நேரத்தில் ஏதாவது பெண் பொமரேனியன் நாயினை ஆண் நாயுடன் கிராஸ் செய்து விடுங்கள். இதனால் ஏற்படும் குட்டியினை அக்குட்டி பிறந்தவுடன் தாயிடமிருந்து பிரிந்ததும் எடுத்து வாருங்கள். அக்குட்டி வந்தநாள் முதல் உங்களுக்கு மிக அற்புதமான பலன்களாக நடக்கும்.

ஏனெனில் அந்நாய்குட்டி பிறந்த லக்னம் உங்கள் லக்னமே மேலும் உங்கள் லக்னத்திற்கு பலமற்று போன யோக கிரகங்கள் மேற்படி குட்டியின் உடலில் இணைத்திருப்பதால் அவை உங்கள் அருகில் தினம் இருப்பதால் அக்குட்டியில் இயங்கும் கிரக சக்தி உங்களையும் இயக்கி யோகமான நிலைக்கு கொண்டு செல்லும்.

மேற்படி வேலையை ஒரு மாதத்திற்கு முன்பே நாள் குறித்து ஏற்பாடு செய்து கொள்ளவும். இம்முறையிலேயே பெரும்பாலான நடிகர், நடிகையினர் நாய்களை அவர்கள் பிறந்த லக்னததிற்கு கிரகங்கள் பலமாக உள்ள நாளில் மேற்படி நாயினை கிராஸ் செய்து அதன் மூலம் ஏற்படும் குட்டியினை வீட்டில் வளர்க்கிறார்கள். அவர்களின் வாய்ப்பும் வசதியும் அனைவரும் அறிவோம்.

நடைமுறையில் இம்முறை மிகவும் அதீதமான பலன் தருவதாக இருக்கிறது. இதனை .................... நாய் பண்ணைகாரர்களிடம் கூறி நிரூபித்தும் இருக்கிறோம்.

தற்சமயம் அவர்கள் இம்முறையையே கையாள்வது மிகவும் போற்றத்தக்கதாகும்.

கிரகங்கள் மனிதனை மட்டும் இயக்கவில்லை. பூமியில் உள்ள புல் பூண்டு போன்ற சகல உயிர்களையும் இயக்குகின்றது என்பதனை மறந்து விடாதீர்கள்.

4. உங்களுக்கு நிறைய தோட்டம் இருந்தால் உங்கள் தோட்டத்தில் நீங்கள் பிறந்த லக்னத்தில் பசுமாட்டிற்கு தேவையான புல், தட்டு, சோள வகைகளை மேற்படி லக்னத்திற்கு யோகமுள்ள கிரகங்கள் நல் நிலையில் வரும் நாளில் பயிரிடுங்கள். பிறகு அவை வளர்ந்ததும் அறுத்து பசுமாட்டிற்கு போட்டு அதை உண்டு வரும் பாலை நீங்கள் பருகிப் பாருங்கள் பிறகு வாழ்க்கையில் அற்புதம் என்றால் என்னவென்று புரியும் உங்களுக்கு. மிக உன்னதமான பலன் தரும் முறை.

5. நீங்கள் வியாபாரம் செய்பவராக இருந்தால் உங்கள் லக்னத்திற்கு 2,10,11-க்குடைய கிரகம் நல்ல நிலையில் வரும் நாளில் ஆற்றில் கிடக்கும் கூழாங்கற்களை கொண்டுவந்து அக்கற்களில் மேற்படி நேரத்தில் உள்ள கிரக சக்தியை ''பிராணா'' முறையில் ஆகர்ஷணம் செய்து அச்சக்தியை மேற்படி கற்களில் செலுத்தி அக்கற்களை உங்கள் வியாபார ஸ்தலத்தைச் சுற்றிலும் உள்ள இடத்தில் ரோட்டில் போட்டு விடுங்கள் பிறகு அக்கற்களை மதிக்கும் மனிதர்கள் உங்கள் கடைகளிலேயே பொருள் வாங்கும் அதிசயத்தை காண்பீர்கள்.

6. உங்கள் தோட்டத்தில் நீங்கள் பிறந்த லக்னத்திற்கு யோகமுள்ள கிரகங்கள் நல்ல நிலையில் வரும் நாளில் மேற்படி லக்னத்தில் எலுமிச்சை செடியை நட்டு மேற்படி நேரத்தில் பூமியில் இருக்கும் கிரக சக்தியை ''பிராணா'' முறையில் ஆகர்ஷணம் செய்து அச்சக்தியை தண்ணீரில் செலுத்தி அந்நீரை செடிக்கு ஊற்றவும்.

பிறகு எலுமிச்சை செடி துளிர்க்க ஆரம்பித்த நாள் முதல் மிக மேலான பலன்கள் ஏற்படும். மேலும் அதில் கிடைக்கும் எலுமிச்சை பழத்தை பழச்சாறு போட்டு அருந்துவது இன்னும் மேலான பலனைத் தரும்.

## இனி ஒவ்வொரு லக்னத்திற்கும் எந்த பிரச்சனைக்காக எந்த கிரக சக்தியை உடலில் இணைப்பது தவிர்ப்பது என்பது பற்றி விரிவாக பார்ப்போம்.

## முதலில் மேஷ லக்னத்தில் பிறந்தவர்களுக்கு

1. தன்னம்பிக்கை தைரியம் குறைவாக இருப்பதாக நீங்கள் உணர்ந்தால் வளர்பிறை செவ்வாய் கிழமை காலை 6 மணியிலிருந்து 7 மணிக்குள் இக்கிரக சக்தியை பிராணா முறையில் உடலுக்குள் ஈர்த்து நீரில் சேமித்து மீண்டும் நீரை அப்பொழுது குடியுங்கள் இக்கிரக சக்தி உடலுடன் இணைந்து விடும்.

2. நவமி திதி அன்று வரும் செவ்வாய் ஓரையில் நீரின் மூலம் இக்கிரக சக்தியை உடலில் இணையுங்கள்.

3. கிருத்திகை நட்சத்திரம் வரும் நாளில் பழனி மலைக்கு சென்று தரிசனம் செய்துவிட்டு பிறகு அவ்விடத்திலேயே கிரகசக்தியை ''பிராணா'' முறையில் ஈர்த்து அச்சக்தியை வேங்கை மர குச்சியில் இணைத்து அக்குச்சியை எந்நேரமும் கையில் வைத்திருங்கள் அதிசயம் நடக்கும்.

''செவ்வாய் கிரக சக்தி கிருத்திகை நட்சத்திரம் வரும் நாளில் பழனி மலையின் மீது விழுகிறது என்பதை மறந்து விடாதீர்கள்''

4. மேஷ லக்னத்திற்கு செவ்வாய் 10 மற்றும் 11ஆம் இடம் வரும் நாளில் இதே லக்னத்தில் வெண்தேக்கு மர கன்று அல்லது நரி வேங்கை மரம் அல்லது மணிபுங்கன் மரம் இவற்றில் ஏதாவது ஒன்றினை ஆற்றங்கரை கோயில் போன்ற இடங்களில் நட்டு விடுங்கள். மேற்க்கண்ட விருஷங்களை நடுவதற்கு முன் இக்கிரக சக்தியை ''பிராணா'' முறையில் ஈர்த்து நீரில் சேமித்து அந்நீரை செடிக்கு விடவும். இவ்வாறு அச்செடி துளிர்த்து வரும் சிறிது காலம் வரை செய்யவும். அச்செடி துளிர்த்த உடனே உங்கள் உடலில் இனம்புரியாத ஒரு மாற்றம் நிகழ்ந்து ஒருவித சக்தி பரவி உங்களுக்குள் மிகவும் சக்தியுடைய ஏதோ ஒன்று உருவாவதை உணர்வீர்கள்

பின்குறிப்பு:

இது எவ்வாறு நிகழ்கிறது எனில் உங்கள் உடலில் ஈர்க்கப்பட்டு நீரில் செலுத்தப்பட்ட கிரக சக்தியானது அந்நீர் ஊற்றப்பட்ட செடியின் வேர்மூலம் ஈர்க்கப்பட்டு அச்செடி வளர்ச்சியை ஆரம்பிக்கிறது. அதேசமயம் அச்செடி உங்களுக்கு எந்த கிரகசக்தி இல்லையோ அச்சக்தி மீண்டும் பூமியில் இருக்கும் நேரம் உங்களால் நடப்படும் செடி அக்கிரக சக்தியை ஈர்த்துக் கொள்ளும் மேலும் அவ்வாறு ஈர்க்கப்பட்ட கிரகசக்தியானது அதில் வார்க்கப்பட்ட நீர் எந்த மனிதனின் பிராண சக்தி மூலம் ஊற்றப்பட்டதோ அம் மனித உடலில்

செடியினுள் ஈர்க்கப்பட்ட கிரகசக்தி தானாகவே ஈர்ப்பின் மூலம் சென்றடைந்துவிடும். அம்மரம் எவ்வளவு காலம் செழிப்புடன் இருக்கிறதோ அவ்வளவு காலம் அதற்கு நீர்வார்த்த மனிதனும் நல்வாழ்வு பெறுவான் என்பது வேதத்தின் சத்தியம்.

1. செவ்வாய்கிழமை (அல்லது) நவமி திதி (அல்லது) கிருத்திகை நட்சத்திரம் வரும் நாளில் இக்கிரக சக்தியை ''பிராணா'' முறையில் ஈர்த்து அச்சக்தியை பாதரஸததில் செலுத்தி அம்மணியை மேஷ லக்னம் வரும் நேரத்தில் (செவ்வாய் 6,8,12 ஆம் இடத்தில் மறைவு கூடாது) வேங்கை மரத்தில் துளையிட்டு மேற்படி பாதரஸத்தை மெழுகுமூலம் உள்வைத்து அம்மர துளையில் வைத்து மேல் சிறு ஆப்பு அடித்து விடவும். பின்பு 27 வது நாளில் செவ்வாய் ஓரையில் அப்பாதரஸத்தை எடுத்தால் அவை கெட்டியாகி மணியாகியிருக்கும். அதனை எடுத்து வலது இடுப்பில் கட்டிக் கொண்டாலும் இக்கிரக சக்தி உடலில் சேர்ந்து விடும்.

2. காடுகளில் விளையும் செம்முள்ளி கோபுரந்தாங்கி செடிகளுக்கு கிருத்திகை நட்சத்திரத்தன்று காப்புகட்டி மேற்படி செடியினால் வேர் அறாமல் எடுத்து அச்செடியின் வடக்கு வேரை மட்டும் எடுத்து தங்க தாயத்துள் வைத்து வலதுபுறம் கட்டிக்கொண்டாலும் இக்கிரகசக்தி உடலில் இணைந்து விடும்.

## தனம், பேச்சு வன்மை, குடும்பம் இவற்றில் தீராத பிரச்சனை இருந்தால்:

பின்குறிப்பு:சுக்கிரன் இந்த லக்னத்திற்கு உடல்ரீதியாக கெடுதல் செய்யும் கிரகமாதலால் இந்த ஒரு கிரக சக்தியை இணைப்பதற்கு நூலாசிரியன் ஆலோசனை பெற்று பிறகு செய்யவும்.

1. வெள்ளிக்கிழமை காலை 6 மணியிலிருந்து 7 மணிக்குள் சுக்கிர கிரகசக்திதியை ''பிராணா'' முறையில் ஈர்த்து நீரில் செலுத்தி அந்நீரை குடியுங்கள். இக்கிரக சக்தி உடலில் இணைந்து விடும்.

அல்லது

2. சூரிய வெளிச்சம் படும் இடத்தில் வெள்ளிக்கிழமையன்று காலை ஏழு மணிக்கு ஆற்றிலிருந்து செம்பு குடத்தில் நீர் கொண்டு வந்து அக்குடத்தினுள் வெண் அல்லி மலரை போட்டு வெண் பட்டு துணியில் குடத்தை கட்டி அதன்மேல் தேங்காய் கலசத்திற்கு வைப்பது போல் வைத்து அக்குடத்தை மொச்சை பருப்பின் மீது வைத்து பிறகு மாலையில் சூரியின் அஸ்தங்கம் அடைந்ததும் அக்குடத்து நீரை பருகுங்கள் சுக்ர சக்தி உடலில் இணைந்து விடும்.

அல்லது

3. வளர்பிறை சஷ்டி திதி அல்லது பூரம், பரணி நட்சத்திரம் வரும் நாளில் (வியாழக்கிழமை தவிர்க்கவும்) மேஷ லக்னம் வரும் நேரத்தில் (சுக்கிரன் 3, 6, 8, 12- இல் இருக்க கூடாது.) பலா அல்லது ாகை அல்லது விளாமரம் அல்லது நந்தியா வட்டம் இவற்றில் ஏதாவது ஒரு மரக்கன்றை கோவிலில் அல்லது ஆற்றங்கரையில் நடவும் பிறகு அதே நேரம் ''பிராணா'' முறையில் கிரகசக்தியை ஈர்த்து அந்நீரை செடிக்கு உடனே ஊற்றி விடவும். பிறகு செடி துளிர்க்க சிறிது காலம் ஆகும். அச்செடி துளிர்க்க துளிர்க்க உங்களின் பேச்சு வன்மையும் தனமும் அந்நாள் முதல் மேம்பட்டு வளரும். குடும்பத்தில் எல்லையில்லாத அமைதி ஏற்படும்.

அல்லது

4. வெள்ளி மற்றும் பரணி, பூரம், சஷ்டி திதி நாட்களில் சுக்கிர கிரக ஓரையில் இக்கிரக சக்தியை பிராணா முறையில் ஈர்த்து பாதரஸத்தில் அச்சக்தியை கட்டை விரல் மூலம் செலுத்தி அப்பாதரஸத்தை மெழுகில் வைத்து பலா மரத்துளையில் மேஷ லக்னம் வரும் நேரத்தில் (சுக்கிர கிரகம் 6,8,12ல் அஸ்தங்கம் இல்லாமல்) வைத்து சிறு ஆப்பு அடித்து விடவும். பிறகு 15-ம் நாளில் அப்பாதரஸத்தை எடுத்து மணியாக கட்டிக்கொண்டாலும் தனம்,

குடும்பம் மேலான பலன்கள் உடனே நடப்பதை காணலாம்.

அல்லது

5. பலா மரக்குச்சியை மொச்சைப் பருப்புடன் சேர்த்து பசுநெய்விட்டு கருக்கவும் பிறகு அச்சாம்பலை வளர்பிறை வெள்ளிக்கிழமை சுக்ர கிரக சக்தியை ''பிராணா'' முறையில் ஈர்த்து சாம்பலில் செலுத்தி காலை 6-7 மணிக்குள் அச்சாம்பலை ஈஸ்வரன் கோவிலில் நந்தியின் அருகில் இருக்கும் பைரவர் சிலை மீது வலது கை கட்டை விரல் மூலம் தடவினால் அத்தெய்வம் உங்களுக்கு வசியப்படும் மேலும் பைரவர் என்பது சுக்கிரனின் அம்சத்தை குறிக்கும் சிறு கடவுள் இதன் மூலம் அச்சிலையில் உரையும் சுக்கிர கிரக சக்தி அதில் தடவப்பட்ட சாம்பல் மூலம் உங்கள் உடலில் அரூப நிலையில் பரவி பலவகையில் தன வகையிலும் குடும்பத்திலும் சுபிட்சம் ஏற்படுத்தும்.

பின்குறிப்பு:- ஆனால் பைரவருக்கு ஏதாவது அபிஷேகம் செய்ய சுத்தப்படுத்தினால் அதில் தடவப்பட்ட சாம்பல் நீருடன் போய் விடுவதால் அச்சக்தி இரண்டொருநாளில் நின்று விடும். எனவே இதனை அடிக்கடி செய்ய வேண்டியிருக்கும்.

அல்லது

6. வளர்பிறை வெள்ளிகிழமை (அல்லது) சஷ்டி திதி வரும் நாளில் திருநாவலூர் (சுக்கிரன் ஸ்தலம்) அல்லது ஸ்ரீ ரங்கம் சென்று அந்நாளில் சுக்கிர ஓரையில் இக்கிரக சக்தியை ''பிராணா'' முறையில் ஈர்த்து கோவில் பூ வாங்கி அப்பூவில் இக்கிரக சக்தியை செலுத்தி கோவிலில் மூலவர் சிலைக்கு மாலையாக கொடுங்கள் இதன் மூலம் மூலவர் சிலையில் உரையும் கிரக சக்தியானது அப்பூமாலையில் உள்ள சக்தியின் மூலம் உங்கள் உடலில் பரவி அதே நேரத்தில் இம் மின்சக்தியின் தேவையுள்ள மனிதர்களை உங்களின்பால் ஈர்க்கப்படுவர்கள் அத்தகைய தொடர்பு மூலம் உங்களுக்கு தனவகையில் மேன்மை கிட்டும்.

## சகோதர வகையில் ஏற்படும் பிரச்சனைகள்

மேஷ லக்னத்திற்கு மேற்படி பிரச்சனையை புதன் கிரகசக்தியை உடலில் இணைத்து சரி செய்யலாம். ஆனால் உடல் நோய்வாய்ப்படும் எனவே இது பற்றி விவரிக்க வில்லை.

## வண்டி, வாகனம், வீடு, மனை இவற்றில் ஏற்ப்படும் பிரச்சனைகள் நீங்க:

1. வளர்பிறை துவாதசி அன்று வரும் சந்திர ஓரையில் இக்கிரக சக்தியை ''பிராணா'' முறையில் ஈர்த்து வலது கை சுண்டு விரல் வழியே இக்கிரக சக்தியை செம்மண்ணில் (ஒரு கோப்பை அளவு) செலுத்தி உங்கள் தெரு எல்லையின் முச்சந்தியில் அம்மண்ணை போட்டு விடுங்கள் இவற்றை செய்யும் நேரம் மேஷ லக்கனமாக இருக்க வேண்டியது அவசியம்.

இதை செய்து முடித்த சில நாட்களிலேயே மேற்படி வண்டி, வாகனம், வீடு, நிலம், மனை இவற்றில் ஏற்பபட்ட பிரச்சனைகள் விரைவில் நீங்கிவிடும்.

இதனை வளர்பிறை வியாழன் அன்று வரும் சந்திர ஓரையிலும், ஏகாதசி அன்று வரும் குரு ஓரையிலும் மேஷ லக்னம் வரும் நேரத்திலும் செய்ட லாம்.

## புத்ர பாக்யம் ஏற்பட

வளர்பிறை ஞாயிற்றுக்கிழமை வரும் சூரிய ஓரையில் இக்கிரக சக்தியை ''பிராணா'' முறையில் ஈர்த்து மோதிர விரல் மற்றும் குரு விரல் மூலம் அரச மர கொழுந்தில் செலுத்தி அதனை அரைத்து சிறிது பசும்பாலில் கலக்கி குடித்து விடவும். இதனை மேஷலக்னம் வரும் வேளையில் செய்யவும். இதனை

கணவன் மனைவி இருபாலரில் யார் மேஷ லக்னத்தை சார்ந்தவர்களோ அவர்கள் மட்டுமே செய்யவும்.

மேற்படி செய்யும் பொழுது மேஷ லக்னத்தாருக்கு குழந்தை செல்வத்தை தரும் சூரியன், குரு சக்தி உடலில் இணைந்து இதுவரை இயங்காத நாளமில்லா சுரப்பிகளை இயங்க வைத்துவிடும். அதன்மூலம் புத்ரபேரு ஏற்படுவதற்கு தேவையான உடல் அவயங்களை இயங்க வைத்து விடும்.

அல்லது

2. வளர்பிறை தசமி திதியில் வரும் சூரிய ஓரையில் அந்நேரத்தில் இருக்கும் கிரக சக்தியை ''பிராணா'' முறையில் ஈர்த்து ஆள்காட்டி விரல் மற்றும் சூரிய விரல் மூலம் கிரகசக்தியை காரமான உணவு வகையில் செலுத்தி அவ்வுணவை அன்னதானமாக கொடுத்து விடுங்கள் நீங்களும் சாப்பிடுங்கள் இதனை செய்யும் நேரம் மேஷலக்ன நேரமாக இருக்க வேண்டும். அன்னதானம் ஆடுதுறையில் உள்ள சூரியனார் கோவிலில் கொடுக்கவும்.

இந்த லக்னத்தில் பிறந்தவர்களுக்கு புத்ர பாக்யம் ஏற்படவில்லையெனில் இவர்கள் உடலில் சூரியன், குருகிரக சக்தி இணையவில்லை என்று பொருள் மேற்கண்ட முறையில் இவ்விரு கிரகசக்தியும் பூமியில் உள்ள நேரம் உடலில் இணைத்து விட்டால் புத்ர பாக்யத்தை தரும் உடல் நாளங்கள் தானாக செயல்பட்டு புத்ர பாக்யத்திற்கு வழிவகுக்கும்.

மேற்படி சூரியன், குரு கிரக சக்தியை உடலில் இணைக்க ஆயிரக்கணக்கான முறைகள் உண்டு. அவற்றில் இரண்டை மட்டும் தந்துள்ளேன்.

**மேஷலக்னத்தார் வாழ்நாள் முழுவதும் யோகமுடன் வாழ்தவற்கு சில:**

1. எக்காரணம் கொண்டும் திருநள்ளாறு செல்லுதல் கூடாது.
2. அம்மன் வழிபாடு தவிர்க்கவும், ஸ்ரீரங்கம், திருநாவலூர் ஸ்தலங்களுக்கு செல்ல கூடாது. சென்றால் உடல்ரீதியான பாதிப்பு ஏற்படுத்தும். (விளக்கம் ஸ்தல முறை பகுதியில் விரிவாக காணவும்)
3. திருப்பதி செல்வது நல்லதல்ல, சென்றுவிட்டு வந்தால் தாய் வகையில் பாதிப்பு ஏற்படும். மற்றும் வீடு, நிலம், மனை, வண்டி வாகனம் நம் கைவிட்டு செல்லும் சூழ்நிலை ஏற்படும் அல்லது பாதிக்கும்.
4. மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கும், திருவெண்காடு புதன் ஸ்தலத்திற்கும் செல்லக்கூடாது. அப்படி சென்று வந்தால் சகோதர வகையில் பிரிவினை ஏற்படும் மற்றும் கடன் அதிகரிக்கும்.
5. தஞ்சை அடுத்துள்ள ஆடுதுறையில் உள்ள சூரியனார் கோவிலுக்கு வளர்பிறை, தசமி, பிரதமை ஞாயிறு கிழமைகளில் சென்றுவர புத்ரபாக்யம் கிட்டும் மற்றும் பூர்வ புண்ணியவசத்தால் வாழ்வில் அந்தஸ்து ஏற்படும்.
6. வெள்ளியில் அரைஞான் கொடி தவிர்க்கவும்.
7. வளர்பிறை துவாதசி அன்று அல்லது வியாழக்கிழமை திருச்செந்தூர், ஆலங்குடி குரு ஸ்தலம் சென்றுவர செல்வம், புகழ் அந்தஸ்து ஏற்படும்.
8. வளர்பிறை செவ்வாய் மற்றும் கிருத்திகை அன்று பழனிமலை சென்றுவர ஆத்ம பலம் அதிகரிக்கும்.
9. எக்காரணம் கொண்டும் வியாழன், செவ்வாய், ஞாயிற்றுகிழமையில் மாமிச உணவு சாப்பிட கூடாது.

10. மாமிச உணவிற்கு வெள்ளிகிழமை உங்கள் லக்னத்திற்கு ஏற்றநாள்.

11. எக்காரணம் கொண்டும் விடிவெள்ளி பார்க்ககூடாது.

12. எக்காரணம் கொண்டும் வெள்ளிகிழமை விரதம் கூடாது.

இதில் சொல்லபப்படாத பிரச்னைகள் எதுவும் இருந்தால் விளக்கம் கேட்டு பிறகு செய்யவும்.

இந்த லக்னத்தில் ஜனித்தவர்கள் தீராத வியாதி எதுவாக இருப்பினும் நேரில் வந்து குணம் பெற்று செல்லவும்.

மனித உடலில் ஏற்படும் எந்த நோயாக இருந்தாலும் கிரகசக்தியின் குறைபாடே என்பதை ஒருபோதும் மறந்துவிடாதீர்கள். அந்நோய் ஏற்பட எக்கிரகசக்தி குறைபாடு காரணமோ அக்கிரகசக்தியை மீண்டும் உடலில் இணைத்து உடனே சரி செய்து விடவும்.

''இனி இந்த லக்னத்தார் எல்லா வகையிலும் சிறப்புற்று வாழ ஆண்டவன் அருள்புரிவாராக''.

## ரிஷப லக்னம்

### கடன் பிரச்சனைகள் தீர: புத்ர பாக்யம் கிடைக்க:

சுக்ர கிரக சக்தியை உடலுடன் இணைக்கும் பொழுது மேற்க்கண்ட பிரச்னைகள் இருந்த இடம் தெரியமல் போகும்.

இக்கிரக சக்தி பூமியில் வெள்ளிக்கிழமை சுக்ர ஓரையிலும், சஷ்டி திதி சுக்ர ஓரையிலும் பூமியில் பூரணமாக இருக்கும் அச்சமயம் ரிஷப லக்னம் வரும் நேரத்தில் இக்கிரக சக்தியை ''பிராணா'' முறையில் உடலுக்குள் ஈர்த்து வலதுகை கட்டைவிரல் வழியாக இச்சக்தியை (ஒரு சொம்பு சுத்தமான நீரல்) செலுத்தி அந்நீரை சிறிது உள்ளுக்கு குடித்த பிறகு தெரு சந்திக்கும் இடத்தில்

ஊற்றி விடுங்கள். மேற்கண்ட பிரச்னை தீர்ந்துவிடும். ஆனால் இதனை வாரம் ஒரு முறை செய்யவும்.

(அல்லது)

பலா மர விருட்சங்களிலிருந்து தயார் செய்யப்பட்ட பாதரஸ மணியில் சுக்ர கிரக சக்தியை வலது கை கட்டைவிரல் வழியே செலுத்தி அம்மணியை வலதுபுற இடுப்பு பகுதியில் அணிந்து கொண்டால் மேற்க்கண்ட பிரச்னை உடனே தீரும். பெண்ணாக இருந்தால் மணியை இடதுபுறம் தரிக்கலாம். இதுவே மிகச்சிறந்த முறையாகும்.

**விளக்கம் பாதரஸ முறை பகுதியில் காண்க**

## தனம், குடும்பம், வாக்கு வன்மை, புத்தி தெளிவு முதலியவற்றில் மிக மேன்மையடைய:

புதன் கிரக சக்தியை உடலில் இணைத்தால் மேற்படி பிரச்னைகள் உடனடியாக தீரும்.

புதன் கிரக சக்தி பூமியில் வளர்பிறை பஞ்சமி திதி புதன் ஓரையிலும், புதன்கிழமை வரும் புதன் ஓரையிலும் பூமியில் பூரணமாக இருக்கும்.

அச்சமயம் இக்கிரக சக்தியை ''பிராணா'' முறையில் ஈர்த்து வலது கை சுண்டுவிரல் வழியே இக்கிரக சக்தியை பூவரசு விருட்சத்தில் இருந்து தயாரிக்கப்பட்ட பாதரஸ மணியில் செலுத்தி அம்மணியை அரைஞான்கொடியில் முதுகுதண்டு முடியுமிடத்தில் கட்டிக் கொள்ளவும்.

(இதனை ரிஷபலக்னம் வரும் நேரத்தில் செய்யவும்) அல்லது

வளர்பிறை புதன்கிழமை அல்லது பஞ்சமி திதி அன்று ரிஷப லக்னம் வரும் வேலையில் இக்கிரகசக்தியை ''பிராணா'' முறையில் ஈர்த்து

அச்சக்தியை வலது கை சுண்டுவிரல் வழியே நீரில் செலுத்தி அந்நீரை அதே நேரத்தில் பூவரசு மரக்கன்றை நட்டு அதற்கு ஊற்றவும். இதனை செய்யும் பொழுது புதன் கிரகம் கோச்சாரத்தில் உங்கள் லக்னத்திற்கு 5, 9, 10, 11-ம் இடங்களில் இருக்குமாறு பார்த்து செய்யவும்.

இதனை செய்வதற்கு ஒரு மாதத்திற்கு முன் ஏதாவது ஜோதிடரிடம் நாள் குறித்து பிறகு அதற்கு தகுந்தாற்போல் தயார் ஆகுங்கள்.

## தொழில், செல்வம், புகழ், அந்தஸ்து ஏற்பட மற்றும் இதன் காரணமாக உள்ள பிரச்னைகள் தீர:

சனி கிரக சக்தியை உடலோடு இணைத்தால் மேற்க்கண்ட இனங்களில் உள்ள பிரச்னைகள் விரைவாக குறையும்.

இக்கிரக சக்தி பூமியில் வளர்பிறை அஷ்டமி திதி சனி ஓரையிலும் மற்றும் சனிக்கிழமையில் வரும் சனி ஓரையிலும் பூமியில் பூரணமாக இருக்கும் அச்சயம் இச்சக்தியை ''பிராணா'' முறையில் ஈர்த்து அச்சக்தியை வலதுகை நடுவிரல் வழியே மகிழமரம் அல்லது நொச்சி மரத்தில் தயாரிக்கப்பட்ட பாதரஸ மணியில் செலுத்தி அம்மணியை ரிஷப லக்னம் வரும் நேரத்தில் உடலில் வலது புறம் (ஆண்) இடதுபுறம் (பெண்) அணிந்து கொள்ளலாம். இது மிகச்சிறந்த நீடித்து பலன்தரும் முறையாகும்.

(அல்லது)

மேற்படி நேரத்தில் இக்கிரக சக்தியை ''பிராணா'' முறையில் ஈர்த்து அச்சக்தியை நல்லெண்ணையில் தயாரிக்கப்பட்ட சாதத்தில் வலதுகை நடுவிரல் வழியே செலுத்தி ரிஷப லக்னம் வரும் நேரத்தில் காகத்திற்கு வைக்கவும். விளக்கம்: பட்சி முறையில் பார்க்கவும்.

(அல்லது)

உச்சந்தலையில் இருந்து பிடுங்கப்பட்ட முடியை ஒரு ஆணியில்கட்டி அதனை வளர்பிறை அஷ்டமி திதி மற்றும் சனிக்கிழமையில் வரும் ரிஷப லக்ன நேரத்தில் திருநள்ளாறு குளத்தில் போட்டு விடவும்.

(அல்லது)

இக்கிரக சக்தியை மேற்படி நேரத்தில் ஈர்த்து அச்சக்தியை எள் கலந்த நீரில் செலுத்தி அந்நீரை ரிஷப லக்னம் வரும் நேரத்தில் எருமைக்கு கொடுக்கவும். இதனை அஷ்டமி அல்லது சனிக்கிழமை செய்யவும்.

முக்கிய குறிப்பு:-

இந்த லக்னக்காரர்களுக்கு திருமணம், கூட்டாளி, தொழிலில் வரும் லாபம் இவற்றில் ஏற்படும் பிரச்னைகளுக்கு அது ஏற்பட எக்கிரக சக்தி காரணமோ அதனை உடலில் இணைக்கலாம். ஆனால் மேற்படி பிரச்னைகளுக்கு ஆலோசனை கேட்டே பிறகு செய்யவும். ஏனெனில் மேற்படி பிரச்னையை குறிக்கும் கிரக சக்திகள் உடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனவே ஆலோசனை கேட்டு செய்யவும்.

மற்றபடி இதில் குறிப்பிட்டுள்ள பிரச்னைகளை ஆலோசனை இன்றி செய்யலாம்.

## மிதுன லக்னம்

**ஆத்ம பலம், தாய்மூலம் கிடைக்கும் சிறப்பு, வண்டி, வாகனம், நிலம், சொத்து, கல்வி, காணிகள் இவற்றில் ஏற்படும் பிரச்னைகள் நீங்க:-**

உங்கள் பிரச்னைகள் மேற்கண்டவற்றில் எதுவானாலும் சரி புதன் கிரக சக்தியை உடலோடு இணைத்தாலே மேற்படி பிரச்னைகள் மாயமாய்

மறையும்.

இக்கிரக சக்தி வளர்பிறை புதன் கிழமை மற்றும் பஞ்சமி திதி அன்று பூமியில் பூரணமாக இருக்கும்.

புன்னைமரம் அல்லது இலந்தை மரம் மேற்படி விருட்சத்தில் தயாரிக்கப்பட்ட பாதரஸ மணியில் இக்கிரக சக்தியை மிதுன லக்னம் வரும் நேரத்தில் ஈர்த்து அச்சக்தியை வலது கை சுண்டு விரல் வழியே இம்மணியில் செலுத்தி முதுகு தண்டு வடம் முடியும் இடத்தில் கட்டிக் கொள்ளவும்.

(அல்லது)

இக்கிரக சக்தி பூமியில் உள்ள நாளில் இச்சக்தியை ''பிராணா'' முறையில் ஈர்த்து அச்சக்தியை பச்சைப் பயிரில் செய்யப்பட்ட பிரசாதத்தில் செலுத்தி மதுரை மீனாட்சி அம்மன் கோவில் அல்லது திருவெண்காடு சென்று வழிபட்டு பிறகு மிதுன லக்னம் வரும் வேளையில் அன்னதானம் தரவும்.

(அல்லது)

உச்சந்தலை முடியை எடுத்து பித்தளையில் சுற்றி வஸ்திரத்தில் வைத்து அத்துடன் பச்சைப் பயிருடன் சேர்த்து முடிந்து அதனை திருவெண்காடு ஸ்தல குளத்தில் போடவும் செய்ய வேண்டிய நாள்: வளர்பிறை புதன்கிழமை மற்றும் பஞ்சமி திதி வரும் நாளில் மிதுன லக்ன நேரத்தில் இதை செய்யவும் (அச்சமயம் கோச்சாரத்தில் புதன் 5, 9, 11-ஆம் இடங்களில் இருக்குமாறு பார்த்து செய்வது நீடித்த பலன் கொடுக்கும்.

(அல்லது)

செந்நாயுருவி செடிக்கு வளர்பிறை பஞ்சமி திதி மற்றும் புதன் கிழமை வரும் நாளில் மிதுன லக்ன நேரத்தில் காப்பு கட்டி தூப தீபம் காட்டி அச்செடியின் வடக்கு போகும் வேரினை எடுத்து பித்தளை தாயத்தில் அடைத்து அதனை முதுகு தண்டு முடியுமிடத்தில் கட்டி கொள்ளவும்.

(அல்லது)

செந்நாயுருவி, இலந்தை மர பட்டை அவற்றை பசுநெய்யுடன் சேர்த்து அக்னியில் இட்டு அச்சாம்பலை எடுத்து இக்கிரக சக்தியை ''பிராணா'' முறையில் ஈர்த்து சுண்டுவிரல் வழியே அச்சக்தியை அச்சாம்பலில் செலுத்தி அதனை எடுத்து பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு வெளியில் செல்லும்பொழுது நெற்றியில் திலகமிட்டு செல்லலாம்.

## புத்ர பாக்யம், கலைகளில் தேர்ச்சி உண்டாக, மாந்திரீகம் புரிந்து கொள்ள, மந்திர சித்தி உண்டாக, சினிமா போன்ற கலை சார்ந்த தொழில் சிறப்படைய:-

மேற்படி அனைத்திற்கும் சுக்ர கிரக சக்தியை மிதுனலக்ன நேரத்தில் உடலில் இணைத்தாலே போதுமானது.

இக்கிரக சக்தி வளர்பிறை சஷ்டி மற்றும் வெள்ளிக்கிழமையில் சுக்ர ஓரையில் பூமியில் பூரணமாக இருக்கும் அந்நேரத்தில் இக்கிரக சக்தியை ''பிராணா'' முறையில் ஆகர்ஷணம் செய்து அச்சக்தியை பலா மரத்தில் செய்த பாதரஸ மணியில் செலுத்தி வலதுபுறம் (ஆண்) இடதுபுறம் (பெண்) அணிந்து கொண்டாலே இக்கிரக சக்தி உடலில் இணைந்து விடும். இதுவே நீடித்து பலன் தரும் சிறப்பான முறையாகும்.

(அல்லது)

மேற்படி நாளில் பலா மரக்கன்றை நட்டு இக்கிரக சக்தி செலுத்தப்பட்ட நீரை ஊற்றவும். அம்மரக்கன்று துளிர்க்க ஆரம்பித்ததும் இக்கிரக சக்தி அந்நீரை ஊற்றிய மனித உடலில் இணைந்து விடும். இது முதன் முதலில் மரக்கன்று நட்டு நீர் ஊற்றுபவர்க்கே சிறப்பாக வேலை செய்யும். இதனை மிதுன லக்னம்

வரும் நேரத்தில் செய்யவும். (சுக்கிரன் கோச்சாரத்தில் 6, 8, 12-ல் மறையாமலும் பாவ கிரக பார்வை சேர்க்கை இல்லாமல் பார்த்துக் கொள்ளவும்)

இங்கே குறிப்பிட்ட பிரச்னை தவிர இதர பிரச்னைகளுக்கு கிரக சக்தியை இணைத்தால் பிரச்னை தீரும். ஆனால் உடலில் பாதிப்பை ஏறப்படுத்தும் அத்தகைய பிரச்னை உள்ளவர்கள் ஆலோசனை கேட்டுவிட்டு கிரக சக்தியை உடலில் இணைக்கலாம்.

## கடக லக்னம்

### ஆத்ம பலம், கற்பனை வளம், காவியம் இவற்றில் சிறப்புற:-

சந்திர கிரக சக்தியை உடலோடு இணைத்தாலே மேற்க்கண்ட விஷயங்களில் சிறப்புறலாம்.

இக்கிரக சக்தி பூமியில் வளர்பிறை திங்கள் மற்றும் ஏகாதசி திதி அன்று சந்திர ஓரையில் பூமியில் பூரணமாக இருக்கும் அச்சமயம் இக்கிரக சக்தியை ''பிராணா'' முறையில் ஈர்த்து அச்சக்தியை மஞ்சள் நிறைந்த தண்ணீரில் வலது கை சுண்டுவிரல் வழியே செலுத்தி அந்நீரை குடித்தால் இச்சக்தி உடலில் இணைந்து விடும்.

(அல்லது)

இச்சக்தியை மஞ்சள் கலந்த நீரில் செலுத்தி அந்நீரை எலுமிச்சை கன்றை நட்டு அதற்கு ஊற்றவும். இதனை கடக லக்னம் வரும் நேரத்தில் செய்யவும். இதற்கு உகந்த நாள் வளர்பிறை திங்கள் மற்றும் ஏகாதசி திதி வரும் நாள் ஏற்றது.

(விளக்கம் விருட்ச முறையில் படிக்கவும்)

(அல்லது)

இச்சக்தியை நாகலிங்கமரத்தில் செய்யப்பட்ட பாதரஸ மணியில் செலுத்தி வலதுபுறம் அணிந்தாலும் இக்கிரக சக்தி உடலில் இணைந்துவிடும்.

## தனம், குடும்பம், வாக்கு பலிதம் சிறப்படைய:-

சூரிய கிரக சக்தியை உடலில் இணைத்தாலே இவற்றில் சிறப்படையலாம்.

இக்கிரக சக்தி வளர்பிறை தசமி திதி மற்றும் ஞாயிறு சூரிய ஓரையில் பூமியில் பூரணமாக இருக்கும் அச்சயம் இக்கிரக சக்தியை ''பிராணா'' முறையில் ஈர்த்து அச்சக்தியை மோதிர விரல் மூலம் இலுப்பை அல்லது பவளமல்லி மரத்திலிருந்து செய்யப்பட்ட பாதரஸ மணியில் செலுத்தி வலதுபுறம் (ஆண்) இடதுபுறம் (பெண்) அணிந்து கொண்டால் இக்கிரக சக்தி உடலோடு இணைந்து விடும். இதனை கடகலக்னம் வரும் வேளையில் செய்யவும்.

(அல்லது)

இக்கிரக சக்தியை மேற்படி நேரத்தில் ஈர்த்து அச்சக்தியை வலதுகை மோதிர விரல் மூலம் ஒரு பேப்பரில் செலுத்தி அப் பேப்பரில் கடக லக்னம் வரும் நேரத்தில் தனம், குடும்ப, சொல்வாக்குபலிதம் இவற்றில் எதில் ஜெயமடைய வேண்டும் (மற்ற பிரச்னை பற்றி எழுத கூடாது) என விளக்கமாக எழுதி அப்பேப்பரை அரச மர குச்சியில் பசு நெய்விட்டு அக்னி வார்த்து அதில் போடவும். பிறகு அச்சாம்பலை எடுத்து வந்து வெளியே காற்றில் பறக்க விடவும்.

உங்கள் கோரிக்கை அதிவிரைவில் நிறைவேறும் முறைகண்டு அதிசயித்துப் போவீர்கள்.

மறந்துவிடாதீர்கள் இச்செயலை கடக லக்னம் வரும் வேலையில் செய்யவும்.

## தொழில், புத்ர பாக்யம் அமையவும் இவற்றில் ஏற்படும் பிரச்சனை தீரவும்:

செவ்வாய் கிரக சக்தியை உடலோடு இணைத்தாலே மேற்ப்படி பிரச்சனைக்கு உடன் தீர்வு கிடைக்கும்.

இக்கிரக சக்தி வளர்பிறை நவமி மற்றும் செவ்வாய்கிழமை செவ்வாய் ஓரையில் பூமியில் பூரணமாக இருக்கும் அச்சமயம் இக்கிரக சக்தியை ''பிராணா'' முறையில் ஈர்த்து ஆள்காட்டி விரலில் வழியே விளாமரம் மற்றும் நந்தியா வட்ட மரம் இவ்விருட்சத்திலிருந்து செய்யப்பட்ட பாதரஸ மணியில் இச்சக்தியை செலுத்தி வலதுபுறம் (ஆண்) இடதுபுறம் (பெண்) அணிந்தாலே இக்கிரக சக்தி உடலோடு இணைந்து விடும்.

(அல்லது)

இக்கிரக சக்தியை மஞ்சள் கலந்த நீரில் செலுத்தி அந்நீரை வேங்கை மர கன்றை நட்டு அதற்கு ஊற்றவும். இதனை கடக லக்னம் வரும் நேரத்தில் செய்யவும். விளக்கம் விருட்ச முறையில் பார்க்கவும்.

## கடன் பிரச்சனை தீரவும், செல்வம், புகழ், அந்தஸ்து ஏற்படவும்:

குரு கிரக சக்தியை உடலில் இணைத்தாலே மேற்படி பிரச்னைகள் உடன் தீர்ந்து செல்வம் புகழ் அந்தஸ்து உடன் ஏற்ப்படும்.

இக்கிரகசக்தி வளர்பிறை வியாழன் மற்றும் திரிதியை, துவாதசி திதிகளில் வரும் குரு ஓரையில் பூமியில் பூரணமாக இருக்கும். அச்சமயம் இக்கிரக சக்தியை ''பிராணா'' முறையில் ஈர்த்து வலதுகை ஆள்காட்டிவிரல்

வழியே இச்சக்தியை சந்தரனமரத்தின் மூலம் செய்யப்பட்ட பாதரஸ மணியில் செலுத்தி வலதுபுறம் (ஆண்) இடதுபுறம் (பெண்) அணிந்து கொண்டால் இக்கிரக சக்தி உடலில் இணைந்துவிடும்.

(அல்லது)

மாதம் ஒரு முறை ஆலங்குடி குரு ஸ்தலம் அல்லது திருச்செந்தூர் வியாழன் அல்லது துவாதசி திதியில் சென்று வந்தாலும் இக்கிரக சக்தி உடலில் இணைந்து விடும். மேற்படி ஸ்தலத்தில் கடக லக்னம் வரும் நேரத்தில் முடிகாணிக்கை செலுத்தினாலும் இக்கிரக சக்தி உடலில் இணைந்து விடும்.

(அல்லது)

இக்கிரகசக்தியை ''பிராணா'' முறையில் ஈர்த்து மஞ்சள் கலந்த நீரில் செலுத்தி கடக லக்னம் வரும் நேரத்தில் (வியாழன் அல்லது துவாதசி திதி அன்று வளர்பிறையில்) கொடுக்காப்புளி மரத்திற்கு அந்நீரை ஊற்றினாலும் இக்கிரக சக்தி உடலோடு இணைந்துவிடும்.

## தொழில், பூர்வ புண்ணிய சொத்து, ஞாபக சக்தி, புத்ர பாக்யம் சிறப்படைய:

செவ்வாய் கிரக சக்தியை உடலில் இணைத்தாலே போதுமானது.

இக்கிரக சக்தி வளர்பிறை நவமி திதி மற்றும் செவ்வாய் கிழமை வரும் செவ்வாய் ஓரையில் பூமியில் பூரணமாக இருக்கும்.

மேற்படி நேரத்தில் இச்சக்தியை ''பிராணா'' முறையில் ஈர்த்து வலது கை ஆள்காட்டி விரலின் வழியே விளாமர விருட்சத்தில் தயாரிக்கப்பட்ட பாதரஸமணியில் செலுத்தி ஆண்(வலது) பெண்(இடது)புறம் அணிந்தால் இக்கிரக சக்தி உடலில் இணைந்து விடும். இதுவே சிறந்த முறை. கடக லக்னம்

வரும் நேரத்தில் செய்யவும்.

இதுதவிர இதில் சொல்லப்படாத பிற பிரச்சனைகளுக்கு ஆலோசனை பெற்று பிறகு கிரக சக்தியை உடலில் இணைக்கவும். இந்த லக்னக்காரருக்கு குரு, சந்திரன், சூரியன், செவ்வாய் தவிர பிற கிரக சக்திகளை இணைப்பது உடலுக்கு பாதிப்பை ஏற்படுத்துமாதலால் ஆலோசனை கேட்டு செய்யவும்.

## சிம்ம லக்னம்

### ஆத்ம பலம் சம்மந்தப்பட்ட பிரச்சனைகளுக்கு:

சூரியன் கிரக சக்தியை உடலில் இணைத்தாலே போதும்.

இக்கிரக சக்தி பூமியில் ஞாயிறுகிழமை மற்றும் தசமி திதியில் வரும் சூரிய ஓரையில் பூமியில் பூரணமாக இருக்கும்.

மேற்படி நாளில் இக்கிரகசக்தியை பிராணா முறையில் ஈர்த்து மோதிரவிரல் வழியே வெண்தேக்கு மரத்தில் கட்டப்பட்ட பாதரஸ மணியில் செலுத்தி சிம்ம லக்னம் வரும் நேரத்தில் அணிந்து கொள்ளலாம். அணிந்த இரண்டொரு நாட்களிலேயே உடல் ரீதியாக மிகுந்த சக்தியும் தன்னம்பிக்கையும் பெருகுவதை உணரலாம். இதுவே சிறந்த முறை.

### தனம், லாபம், குடும்பம் இவற்றில் சிறப்படைய:

புதன் கிரக சக்தியை உடலில் இணைத்தாலே போதுமானது.

இக்கிரக சக்தியை இணைப்பது எப்படி என்பது பற்றி மிதுன லக்னம் பகுதியில் படித்து பார்த்து செய்யவும். ஆனால் இச்சக்தியை இணைக்கும் நேரம் மட்டும் சிம்ம லக்னம் வரும் நேரமாக பார்த்து செய்யவும்.

### தொழில் சிறப்படைய:

சுக்ர கிரக சக்தியை உடலில் இணையுங்கள்.

இணைக்கும் முறை துலா லக்னத்திற்கு சொல்லப்பட்ட முறைப்படி செய்யவும்.

செய்யும் காலம் மட்டும் சிம்மலக்னம் வரும் நேரமாக இருக்க வேண்டும்.

### தாய் சுகம், வண்டி, வாகனம், காணிகள், சொத்து, சுகம், செல்வம், புகழ் அந்தஸ்து ஏற்பட:

செவ்வாய் கிரக சக்தியை உடலில் இணைத்தாலே போதுமானது.

இக்கிரகசக்தியை இணைக்கும் முறையை மேஷலக்னதாருக்கு சொன்ன முறையை பின்பற்றவும். ஆனால் செய்யும் நேரம் மட்டும் சிம்மலக்னம் வரும் சமயம் செய்யவும்.

இந்த லக்னத்தாருக்கு இதில் சொல்லப்படாத பிரச்னைகளுக்கு ஆலோசனை கேட்டு செய்யவும். ஏனெனில் சூரியன், செவ்வாய், சுக்கிரன், புதன் கிரக சக்தியை தவிர மற்ற கிரக சக்திகள் உடலுக்கு தீமை புரியும் என்பதால் சற்று ஆலோசனை கேட்டு செய்யவும்.

## கன்னி லக்னம்

### ஆத்ம பலம், தன்னம்பிக்கை, தொழில் உயர்வு இவற்றிற்கு:

புதன் கிரகசக்தியை உடலில் இணைத்தாலே போதும். இணைக்கும் முறை மிதுன லக்னத்தாருக்கு சொல்லப்பட்ட முறையிலேயே செய்யவும்.

செய்யும் காலம் மட்டும் கன்னி லக்னம் வருமாறு பார்த்துக் கொள்ளவும்.

**தனம், செல்வம், புகழ் அந்தஸ்து பிதுர்வகை சொத்து இவற்றில் ஏற்படும் பிரச்னைகளுக்கு:**

சுக்ர கிரகசக்தியை உடலில் இணைத்தாலே போதும். இணைக்கும் முறை ரிஷப லக்னத்தாருக்கு சொல்லப்பட்ட முறையிலேயே செய்யலாம். ஆனால் செய்யும் காலம் மட்டும் கன்னி லக்னம் வரும்படி பார்த்துக் கொள்ளவும்.

இதில் சொல்லப்படாத மற்ற பிரச்சனைகளுக்கு ஆலோசனை கேட்டு பிறகு கிரக ச்க்தியை உடலில் இணைக்கவும்.

## துலா லக்னம்

**ஆத்ம பலம், தன்னம்பிக்கை பெற:**

சுக்ர கிரகசக்தியை உடலில் இணைத்தாலே போதுமானது. இக்கிரக சக்தியை இணைக்கும் முறை ரிஷப லக்னத்தாருக்கு சொல்லப்பட்ட முறையிலேயே செய்யவும். செய்யும் காலம் மட்டும் துலா லக்னம் நேரம் வரும்படி பார்த்துக் கொள்ளவும்.

**தாய் சுகம், வீடு, மனை, காணிகள், வண்டி, வாகனம், புத்ர பாக்யம், பூர்வ புண்ணியம் இவற்றில் எந்த பிரச்சனை இருந்தாலும்:**

சனி கிரக சக்தியை உடலில் இணைத்தாலே போதுமானது. இக்கிரக சக்தியை இணைக்கும் முறை ரிஷப லக்னத்தாருக்கு சொல்லப்பட்ட முறையிலேயே செய்யவும். ஆனால் செய்யும் காலம் மட்டும் துலா லக்னம் நேரம் வரும்படி செய்யவும்.

**வெளிநாடு போக, ஏற்றுமதி, சிறப்படைய, செல்வம், புகழ், அந்தஸ்து ஏற்ப்பட**

புதன் கிரக சக்தியை உடலில் இணைத்தாலே போதுமானது.

இக்கிரக சக்தியை இணைக்கும் முறை ரிஷப லக்னத்தாருக்கு சொல்லப்பட்ட முறையிலேயே செய்யவும்.

செய்யும் காலம் மட்டும் துலா லக்னம் வரும் நேரத்தில் செய்யவும்.

**தொழில் சிறப்படைய:**

சந்திர கிரக சக்தியை உடலில் இணைத்தாலே போதுமானது.

இக்கிரக சக்தியை இணைக்கும் முறை கடக லக்னத்தாருக்கு சொல்லப்பட்ட முறையிலேயே தேர்ந்தெடுக்கவும்.

செய்யும் காலம் மட்டும் துலா லக்னம் நேரம் வரும்படி செய்யவும்.

இதில் சொல்லப்படாத பிரச்னைகள் இந்த லக்னத்தாருக்கு இருந்தால் தக்க ஆலோசனை பெற்று பிற கிரக சக்தியை உடலில் இணைக்கலாம்.

## விருச்சிக லக்னம்

**ஆத்ம பலம், தன்னம்பிக்கை பெற**

செவ்வாய் கிரக சக்தியை உடலில் இணைத்தாலே போதுமானது.

செவ்வாய் கிரக சக்தியை உடலில் இணைத்தாலே போதுமானது.

மேஷ லக்னத்தாருக்கு சொல்லப்பட்ட முறைப்படி இக்கிரகசக்தியை உடலில் இணைக்கலாம். ஆனால் செய்யும் காலம் மட்டும் விருச்சிக லக்னம் வரும் நேரத்தில் செய்யவும்.

**தனம், குடும்பம், வாக்கு பலிதம், புத்ர பாக்யம், பூர்வ புண்ணியம் இவற்றில் ஏற்பட்ட பிரச்னைகளை தீர்க்க:**

குரு கிரக சக்தியை உடலில் இணைத்தாலே போதுமானது.

இக்கிரக சக்தியை இணைக்கும் முறை கடக லக்னத்தாருக்கு சொல்லப்பட்டுள்ள முறையில் இணைக்கவும்.

செய்யும் காலம் மட்டும் விருச்சிக லக்னம் வரும் நேரத்தில் செய்யவும்.

**செல்வம், புகழ், அந்தஸ்து, பிதுர்வகையில் ஏற்படும் பிரச்னைகள் தீர:**

சந்திர கிரக சக்தியை உடலில் இணைத்தாலே போதுமானது.

இக்கிரக சக்தியை இணைக்கும் முறை கடக லக்னத்தாருக்கு சொல்லப்பட்டுள்ள முறையில் செய்யவும்.

செய்யும் காலம் மட்டும் விருச்சிக லக்னம் வரும் நேரமாக அமைத்துக் கொள்ளவும்.

**தொழில் சிறப்படைய:**

சூரியன் கிரக சக்தியை உடலில் இணைத்தாலே போதுமானது.

இணைக்கும் முறை மேஷ லக்னத்தாருக்கு சொல்லப்பட்டுள்ள முறையில் செய்யவும்.

செய்யும் காலம் மட்டும் விருச்சிக லக்னத்தில் அமைத்துக் கொள்ளவும்.

இதில் சொல்லப்படாத பிரச்னைகள் இந்த லக்னத்தாருக்கு இருந்தால் தக்க ஆலோசனை கேட்டு பிற கிரக சக்தியை உடலில் இணைக்கலாம்.

## தனுசு லக்னம்

### ஆத்ம பலம், தன்னம்பிக்கை, தொழில் சிறப்படைய:

குரு கிரக சக்தியை இணைத்தாலே போதுமானது.

இக்கிரக சக்தி பூமியில் வளர்பிறை துவாதசி, திருதியை திதி மற்றும் திங்கள் கிழமையில் வரும் குரு ஓரையில் பூமியில் பூரணமாக இருக்கும்.

மேற்படி சமயத்தில் இக்கிரக சக்தியை ''பிராணா'' முறையில் ஈர்த்து வலதுகை ஆள்காட்டி விரலில் வழியே அரசமரத்தில் செய்யப்பட்ட பாதரஸ மணியில் செலுத்தி வலதுபுறம்(ஆண்) இடதுபுறம் (பெண்) அணிந்தால் இக்கிரகசக்தி உடலில் இணைந்து விடும்.

அல்லது

வளர்பிறை துவாதசி, திருதியை திதி மற்றும் வியாழக்கிழமையில் கடலை பிரசாதம் செய்து இக்கிரக சக்தியை வலது கை ஆள்காட்டி விரலின் வழியே இப்பிரசாதத்தில் செலுத்தி திருச்செந்தூர் ஸ்தலத்தில் தனுர் லக்னம் வரும் நேரத்தில் அன்னதானமாக கொடுக்கவும்.

அல்லது

மேற்படி நாளில் அத் திருத்தலத்தில் முடிகாணிக்கை செலுத்தினாலும் இக்கிரக சக்தி உடலில் இணைந்து விடும்.

### ஞாபகசக்தி, புத்ர பாக்யம் ஏற்பட:

செவ்வாய் கிரக சக்தியை உடலில் இணைத்தாலே போதுமானது.

மேஷ லக்னத்தாருக்கு சொல்லப்பட்டுள்ள முறையில் இக்கிரக சக்தியை உடலில் இணைக்கவும்.

செய்யும் காலம் மட்டும் தனுர் லக்னம் வரும்படி பார்த்து செய்யவும்.

## செல்வம், புகழ், அந்தஸ்து மற்றும் பிதுர்வகையில் ஏற்படும் இன்னல்கள் நீங்க:

சூரியன் கிரக சக்தியை உடலில் இணைத்தாலே போதுமானது. இக்கிரக சக்தியை இணைக்கும் முறை.

வளர்பிறை தசமி திதி மற்றும் ஞாயிற்றுக்கிழமையில் வரும் சூரிய ஓரையில் இக்கிரக சக்தி பூமியில் பூரணமாக இருக்கும்.

அச்சமயம் இக்கிரக சக்தியை ''பிராணா'' முறையில் ஈர்த்து மோதிர விரல் மூலம் வாதநாராயண மரத்திலிருந்து தயாரிக்கப்பட்ட பாதரஸ மணியில் செலுத்தி வலதுபுறம் (ஆண்) இடதுபுறம் (பெண்) அணிந்து கொண்டாலும் இக்கிரக சக்தி உடலோடு இணைந்து விடும். இதனை தனுர் லக்னம் வரும் நேரத்தில் செய்யவும்.

(அல்லது)

மேற்படி கிரக சக்தியை அச்சக்தி பூமியில் இருக்கும் காலத்தில் ''பிராணா'' முறையில் ஈர்த்து வலது கை மோதிரவிரல் வழியே செந்தாமரை மலர் இடப்பட்ட தண்ணீரில் செலுத்தி அந்நீரை ஆற்றில் விடவும். ஆற்றில் விடும் காலம் தனுர் லக்னகாலமாக இருத்தல் வேண்டும்.

இதில் சொல்லப்படாத பிரச்சனைகள் ஏதுமிருந்தால் ஆலோசனை கேட்டு மற்ற கிரக சக்திகளை உடலில் இணைக்கலாம்.

# மகர லக்னம்

## ஆத்ம பலம், தன்னம்பிக்கை, தனம், குடும்பம், வாக்கு பலிதம் இவைகள் சிறப்புற:

சனி கிரக சக்தியை உடலில் இணைத்தாலே போதுமானது.

இக்கிரக சக்தியை இணைக்கும் முறை ரிஷப லக்னத்தாருக்கு சொல்லப்பட்டுள்ளவாறு செய்யவும். செய்யும் காலம் மட்டும் மகர லக்னம் வரும் நேரத்தில் செய்யவும்.

## புத்ர பாக்யம், பூர்வ புண்ணியம், புத்தி, ஞாபகம், தொழில் இவைகளில் ஏற்பட்ட தடைகள் நீங்க:

சுக்ர கிரக சக்தியை உடலில் இணைத்தாலே போதுமானது.

மிதுன லக்னத்தாருக்கு சொல்லப்பட்டுள்ள முறையை கையாளவும் செய்யப்படும் காலம் மகர லக்னம் வருமாறு பார்த்துக் கொள்ளவும்.

## செல்வம், புகழ், அந்தஸ்து, பிதுர்வகையில் ஏற்படும் பிரச்னைகள் அனைத்திற்கும்:

புதன் கிரக சக்தியை உடலில் இணைத்தாலே போதுமானது.

இக்கிரக சக்தியை இணைக்கும் முறை மிதுன லக்னத்தாருக்கு சொல்லப்பட்டுள்ள முறையில் இணைக்கவும். செய்யப்படும் காலம் மகர லக்னம் வரும் நேரமாக அமைய வேண்டும்.

மேற்குறிப்பிட்ட பிரச்னைகள் தவிர இந்த லக்னத்தாருக்கு வேறு பிரச்னையிருந்தால் ஆலோசனை கேட்டு பிறகு கிரக சக்தியை இணைக்கவும்.

# கும்ப லக்னம்

## தைரியம், வெற்றி, வீரம், சகோதரம் இவற்றில் ஏற்படும் பிரச்னைகளுக்கு:

செவ்வாய் கிரக சக்தியை உடலில் இணைத்தாலே போதுமானது.

இக்கிரக சக்தியை இணைக்கும் முறையினை கடக லக்னத்தாருக்கு சொல்லிய முறையிலேயே செய்யவும். செய்யும் காலம் மட்டும் கும்ப லக்னம் வரும் நேரத்தில் செய்யவும்.

**வீடு, மனை, வண்டி, வாகனம், தாய்வழி சிறப்பு, கல்வி, செல்வம், புகழ் அந்தஸ்து இவைகள் ஏற்படவும். இவற்றிலுள்ள பிரச்னைகள் தீரவும்.**

சுக்ர கிரக சக்தியை உடலில் இணைத்தாலே போதுமானது.

இக்கிரக சக்தியை இணைக்கும் முறை ரிஷபம் மற்றும் மிதுன லக்னத்தாருக்கு சொல்லப்பட்டுள்ள முறையிலே இணைக்கவும். செயல்படுத்தும் காலம் மட்டும் கும்ப லக்னம் வரும் சமயம் செய்யவும்.

இந்த லக்னத்தாருக்கு இதில் சொல்லப்படாத பிரச்சனைகளுக்கு ஆலோசனை கேட்ட பிறகு கிரக சக்தியை உடலில் இணைக்கவும்.

## மீன லக்னம்

**தனம், குடும்பம், வாக்கு, செல்வம், புகழ் அந்தஸ்து, பிதுர்வகை சிறப்பு மேம்படவும் இவற்றிலுள்ள பிரச்னைகள் தீரவும்:**

செவ்வாய் கிரக சக்தியை உடலில் இணைத்தாலே போதுமானது.

இக்கிரக சக்தியை இணைக்கும் முறை கடக லக்னத்தாருக்கு சொன்ன முறையிலே செய்யவும். காலம் மட்டும் மீன லக்னம் வரும் சமயம் செய்யவும்.

**புத்ர பாக்யம், பூர்வ புண்ணியம் பலப்பட:**

சந்திரன் கிரக சக்தியை உடலில் இணைத்தாலே போதுமானது.

இணைக்கும் முறை கடக லக்னத்தாருக்கு சொன்னதுபோல் இணைக்கலாம். காலம் மட்டும் மீன லக்னம் வரும் நேரத்தில் செய்யவும்.

இந்த லக்னத்தாருக்கு இதில் சொல்லப்படாத பிரச்சனை எதுவும் இருப்பின் ஆலோசனை கேட்ட பிறகு அதற்குரிய கிரக சக்தியை உடலில் இணைக்கவும்.

## உணவை ஏன் வாழை இலையில் சாப்பிட வேண்டும்:

வாழை மரத்திலிருந்து எடுக்கப்பட்ட இலைக்கும் வாழை மரத்திற்கும் மின்காந்த ரீதியான இணைப்பு எப்பொழுதும் இருக்கும்.

வாழை மரம் மிக உயர்ந்த கிரக சக்திகளை உடையமரம். மேலும் வாழை கன்னி தெய்வம் வீற்றிருக்கும் மரம், கன்னிப் பெண்ணாக கருதப்படும் மரம் (எனவே தான் வாழைக்கு தாலி கட்டும் பழக்கம் களத்திர தோஷ பரிகாரத்தில் வந்தது) எவ்விதமான பாதிப்பும் இல்லாத கிரக சக்தியை உடைய மரம்.

இவ்வாழை இலையில் இடப்படும் உணவும் இம்மரத்தில் இயங்கும் சக்தியை அடைகிறது. அதில் பரிமாறப்பட்ட உணவை உண்ணும் மனிதனும் வாழையில் இயங்கும் சக்தியை உடலில் பெறுகிறான். மேலும் வாழை இலையில் பசு நெய்சாதம் பரிமாறப்பட்டு சாப்பிடுவது மிக உயர்ந்த பலனை தரும். ஏனெனில் நெய் எடுக்கப்படும் பாலும் அப்பாலைத் தரும் பசுவும் உயர்ந்த தெய்வீக சக்திகளை பெற்றவை.

பசுவின் உடலில் தெய்வங்கள் வசிப்பதாக ஐதீகம். பசுவின் உடலில் உயர்ந்த கிரக சக்திகள் இயங்குகின்றன. இத்தகைய சக்திகள் பசுவின் கோமியம், சாணம், பால், நெய் அனைத்திலும் பூரணமாக நிறைந்திருக்கும்.

பசுநெய்யில் செய்யப்பட்ட சாதத்தில் உயர்ந்த கிரக சக்திகள் இருக்கும் இவை அவ்வுணவை உண்ணும் மனித உடலில் சென்று மனித பிண்டத்தை

பசுவை ஆளும் உயர்ந்த தெய்வீக சக்திகளுடன் பிணைத்துவிடும். அவ்வாறு தெய்வீக சக்தியை அடைந்த உடல் அத்தகைய சக்திபெற்ற மனித தொடர்புகளை ஈர்த்து கொண்டுவரும். அதன்மூலம் வாழ்வில் சிறப்படையலாம்.

வாழை இலையில் பரிமாறப்பட்ட பசுநெய் கலந்த உணவு அவ்வுணவினை உண்ணும் மனித பிண்டத்தை வாழையை இயக்கும் உயர்ந்த கிரக சக்தியுடனும் பசுவினை இயக்கும் தெய்வ சக்தியுடனும் இணைத்துவிடும். இச்சக்தி இணையப்பட்ட மனித உடல் இதே சக்திநிலையில் இருக்கும் மனித தொடர்புகளை ஆகர்ஷணம் செய்துதரும். அதன் மூலம் மேலும் நம் வாழ்வு சிறப்படையும்.

வாழை இலையைப் போலவே மந்தாரை, பூவரசு, தென்னை, தாமரை, பாக்குமட்டை ஆகிய இலைகளும் தெய்வீக சக்தியுடையவையே.

வாழை இலை மற்றும் மேற்ப்படி இலையில் ஒரு போதும் மாமிச உணவை பரிமாறி உண்ணுதல் கூடாது.

திருமணமாகாத கன்னிப் பெண்கள் தலைமுடியினை வாழை நாரினால் கட்டுதல் மிக அவசியம். ஏனெனில் அப்பெண்ணின் உடம்பை இயக்கும் சக்தி வாழையை இயக்கும் சக்தியுடன் பிணைக்கப்பட்டு தெய்வீக நிலையில் பெண்கள் வளர்வார்கள்.

ஒரு மரத்திலிருந்து எடுக்கப்படும் பூ, கனி, இலை, வேர், வேரடிமண், பட்டை, நார் அனைத்தும் அவை எடுக்கப்பட்ட மரத்தின் சக்தியுடன் எப்பொழுதும் இணைந்த நிலையிலேயே இருக்கும்.

## சந்தனம், மஞ்சள், குங்குமத்தின் சிறப்பு:

சந்திரனின் கிரக சக்தி சந்தனத்தில் உள்ளது.

குருவின் கிரக சக்தி மஞ்சளில் உள்ளது.

செவ்வாய் கிரக சக்தி குங்குமத்தில் உள்ளது.

கோவில் சிலைகளுக்கு சந்தனம், மஞ்சள், குங்குமத்தில் அபிஷேகம் செய்யும் பொழுது மேற்படி கிரகசக்திகள் அச்சிலையில் அதன் வழியே ஊடுருவும்.

சந்திரன், குரு கிரகசக்தி ஒன்றாக சேர்ந்தால் குரு சந்திரயோகமும், செவ்வாய், சந்திர கிரகசக்தி இணைந்தால் சசிமங்கள யோகமும் ஏற்படும். இத்தகைய யோகத்தால் அனைத்து செல்வங்களும் அடையலாம்.

மேற்படி கிரக சக்திகள் பூமியில் உள்ள நாளில் பிறந்தவர்களுக்கு மேற்படி யோகம் பூரணமாக அமைந்து மேற்படி கிரகசக்தியில் பிறந்த உயர்ந்த மனித தொடர்புகள் வாய்க்கப்பட்டு வாழ்நாள் முழுவதும் சந்தோஷமாக இருக்கிறார்கள்.

மேற்படி கிரகசக்தி பூமியில் உள்ள நாளில் பிறந்தவர்கள் கோவிலுக்கு போனாலும் போகாவிட்டாலும் வாழ்நாள் முழுவதும் யோகசாலிகளே.

ஆனால் நம்மில் பலர் மேற்படி மனிதர்களை உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டு அவர்களெல்லாம் கோயிலுக்கு போனதாலா? சம்பாதித்தார்கள் என்று வியாக்யானம் பேசி தானும் கெட்டு தன்னால் முடிந்த வரை பிறரையும் கெடுக்கிறான்.

ஆலயங்கள் செல்வதே கிரக சக்திகளை உடலில் பெறுவதற்கு தான் ஆனால் எந்த ஆலயங்களில் எந்த கிரக சக்தியுள்ளது என தெரிந்து அதற்கேற்றாற் போல் செல்லவும்.

## கிரக சக்தி உறையும் ஸ்தலங்கள்

**சூரியன்:**

சூரியனார் கோவில்
(கும்பகோணம் தாலுகா)

திருக்கண்டியூர் வீரட்டம்
(தஞ்சை-திருவையாறு வழியில்)

திருப்புறவார் பனங்காட்டூர்
(விழுப்புர்ததிற்கு வடக்கில்)
முண்டியபாக்கம் ரயில் நிலையம் அருகில்.

## மேற்ப்படி ஸ்தலத்திற்கு செல்வதால் ஏற்படும் பலன்கள்

**மேஷ லக்னத்தில் பிறந்தவர்களுக்கு:**

புத்ர பாக்யம், ஞாபகம், பூர்வ புண்ணியம் இவற்றிலுள்ள இடையூறுகள் நீங்கும்.

**ரிஷப லக்னத்தில் பிறந்தவர்களுக்கு:**

கல்வி, வண்டி, மனை, காணி நிலம், தாய்வழி சொத்து இவற்றில் ஏற்ப்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**சிம்ம லக்னத்தில் பிறந்தவர்களுக்கு:**

ஆன்ம பலம் ஏற்படும்.

**விருச்சிக லக்னத்தில் பிறந்தவர்களுக்கு:**

தொழில் சிறப்படையும்.

**மற்ற லக்னத்தில் பிறந்தவர்கள் ஆலோசனை கேட்டுவிட்டு பிறகே மேற்படி ஸ்தலத்திற்கு செல்லவும்.**

மேற்படி ஸ்தலத்திற்கு செல்லும் பொழுது பூக்களை வாங்கி அப்பூக்களில் ''பிராணா'' முறையில் கிரக சக்தியை ஈர்த்து அக்கிரக சக்தியை மோதிர விரல் வழியே பூக்களில் செலுத்தி மேற்படி ஸ்தலத்திலுள்ள மூலவருக்கு போடவும். இதனால் மூலவர் சிலையில் உறையும் சூரிய கிரக சக்தியானது நம்மில் உறையும். நம்மில் உறையும் சக்தி மூலவர் சிலையில் இயங்கும் சக்தியுடன் பிணைக்கப்படும்.

மேஷ, ரிஷப, சிம்மம் மற்றும் விருச்சிக லக்னத்தில் பிறந்திருந்து சூரியன் ஜனன லக்னத்திற்கு 3, 6, 8, 12-ல் மறைந்திருந்தால் அவசியம் இத்தலத்திற்கு மூன்று மாதத்திற்கு ஒரு முறை சென்று வரவும். ஒவ்வொருமுறை செல்லும் பொழுதும் பூக்களில் மேற்கூறிபடி செய்து மூலவருக்கு போடவும். மேற்படி ஸ்தலத்திற்கு வளர்பிறை ஞாயிறு மற்றும் தசமி திதியில் செல்லுதல் அவசியம்.

## சந்திரன்

1. திங்களூர்
2. திருப்பதி

### மேற்படி ஸ்தலத்திற்கு செல்வதால் ஏற்படும் பலன்கள்

**கடக லக்னத்தாருக்கு:**

ஆத்ம பலம் அதிகரிக்கும்.

**கன்னி லக்னத்தாருக்கு:**

எத்தொழில் செய்தாலும் வருமானம் ஏற்படும்.

**துலா லக்னத்தாருக்கு:**

தொழில் ஏற்படும், தொழிலில் உள்ள சிரமங்கள் மறையும்.

**விருச்சிக லக்னத்தாருக்கு:**

செல்வம், புகழ், அந்தஸ்து பிதுர்வழி சொத்துக்கள் கிடைக்கும்.

**மீன லக்னத்தாருக்கு:**

புத்ர பாக்யம் ஏற்படும். ஞாபகம் பெருகும்.

**மற்ற லக்னத்தார்கள் ஆலோசனை கேட்டு பிறகு செல்லவும்.**

மேற்ப்படி ஸ்தலத்திற்கு செல்லும் பொழுது பூக்களை வாங்கி அப்பூவில் ''பிராணா'' முறையில் கிரக சக்தியை ஈர்த்து அச்சக்திகளை சுண்டு விரல் வழியே பூவில் செலுத்தி அப்பூவினை இறைவனுக்கு செலுத்தவும்.

ஜனன ஜாதகத்தில் சந்திரன் லக்னத்திற்கு 3, 6, 8, 12-ல் மறைந்திருந்தால் அவசியம் செல்ல வேண்டிய ஸ்தலம். (இது கடகம், கன்னி, துலாம், மீனம் மற்றும் விருச்சிக லக்னத்தாருக்கு மட்டும்)

## குரு

1. தென்குடித் திட்டை
தஞ்சை - மாயவரம் செல்லும் வழியில் ஒன்பதாம் கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

2. திருவலிதாயம்
சென்னை

3. திருச்செந்தூர்
மேற்படி ஸ்தலத்திற்கு செல்வதால் ஏற்படும் பலன்கள்.

**மேஷ லக்னத்தாருக்கு:**

செல்வம், புகழ், அந்தஸ்து, பிதுர்வகையில் அடையும் சிறப்பு இவைகளில் மேன்மை கிடைக்கும்.

புகழ், கௌரவம், அந்தஸ்து மற்றும் பிதுர் வகையில் ஏற்படும் இடர்பாடு இவைகள் நீங்கள்.

**விருச்சிக லக்னத்தாருக்கு:**

தனம், குடும்பம், வாக்கு, புத்ர பாக்யம் இவற்றில் ஏற்பட்ட தடைகள் விலகும்.

**தனுர் லக்னத்தாருக்கு:**

ஆன்ம பலம், தொழில் சிறப்படையும்.

**மீன் லக்னத்தாருக்கு:**

ஆன்ம பலம், தொழில் சிறப்படையும்.

**மற்ற லக்னத்தார்கள் ஆலோசனை கேட்டு பிறகு செல்லவும்.**

மேற்படி ஸ்தலத்திற்கு வளர்பிறை, வியாழன் மற்றும் துவாதசி திதி அன்று செல்லவும். செல்லும் போது பூக்களை வாங்கி ''பிராணா'' முறையில் கிரக சக்தியை ஈர்த்து அச்சக்தியை வலது கை ஆள்காட்டி விரல் மூலம் பூவில் செலுத்தி பிறகு கோவிலின் மூலவருக்கு செலுத்தவும்.

இதன் மூலம் மூலவர் சிலையில் உறையும் கிரக சக்தியானது நம்மிலும் உறையும் இவ்வாறு வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் செய்யவும்.

## ராகு

திருநாகேஸ்வரம்
ஜனன கால ஜாதகத்தில் ராகு 3, 6, 11 ஆம் இடங்களில் அமையப் பெற்ற லக்னத்தார் மட்டுமே செல்ல வேண்டிய ஸ்தலம்.

**மற்றவர்கள் ஆலோசனை கேட்டு பிறகு செல்லவும்.**

## கேது

திருக்காளத்தி
ஜனன கால ஜாதகத்தில் 3, 6, 11 ஆம் இடங்களில் கேது அமையப் பெற்ற லக்னத்தார் மட்டுமே செல்ல வேண்டிய ஸ்தலம்.

**மற்றவர்கள் ஆலோசனை கேட்டு பிறகு செல்லவும்.**

## சனி

திருநள்ளாறு

ரிஷப, துலா லக்னத்தாருக்கு ஏற்ற ஸ்தலம்

மற்ற லக்னத்தார்கள் 7 1/2 சனி நடைபெறும் காலத்தில் மட்டும் தரிசனம் செய்யலாம்.

## செவ்வாய்

1. திருச்சிறுகுடி
(மாயவரம் அருகில்)

2. திருப்புள்ளிருக்கு வேளூர்
(வைத்தீஸ்வரன் கோவில்)

மாயவரம்-சிதம்பரம் போகும் வழியில் உள்ள ஸ்தலம்.

கடக, விருச்சிக, சிம்ம, மேஷ, தனூர், மீன லக்னத்தாருக்கு மேற்படி ஸ்தலம் மிகுந்த யோகமளிக்கும்.

**கடக லக்னத்தாருக்கு:**

மேற்ப்படி ஸ்தலம் புத்ர பாக்யம், தொழில் விருத்தி ஏற்ப்படுத்தும்.

**சிம்ம லக்னத்தாருக்கு:**

மேற்படி லக்னத்திற்கு வண்டி, வாகனம், காணி நிலம், கல்வி மற்றும் செல்வம், அந்தஸ்து, கவுரவம் போன்றவற்றில் ஏற்படும் தடைகளுக்கு மேற்ப்படி ஸ்தலம் மிகவும் உகந்தது.

**விருச்சிக லக்னத்தாருக்கு:**

ஆன்ம பலம் தரும் ஸ்தலம்.

**தனூர் லக்னத்தாருக்கு:**

புத்ர பாக்யம் ஏற்படும் ஞாபக சக்தி பெருகும்.

**மீன லக்னத்தாருக்கு:**

வாக்கு பலிதம், தன விருத்தி, செல்வாக்கு, பிதுர் வகையில் சிறப்புகள் கிடைக்கும்.

**மேஷ லக்னத்தாருக்கு**

ஆன்ம பலம் ஏற்படும்.

**மற்ற லக்னத்தார்கள் ஆலோசனை கேட்டு பிறகு செல்லலாம்.**

மேற்படி ஆலயத்திற்கு செல்லும் பொழுது கிரக சக்தியை பூவில் செலுத்தி கோவில் மூலவருக்கு செலுத்தவும். வளர்பிறை செவ்வாய் மற்றும் கிருத்திகை அன்று செல்லவும்.

## சுக்கிரன்

1. திருநாவலூர்
(பண்ருட்டி, வடலூர் அருகில்)

2. ஸ்ரீரங்கம்

மிதுன,ரிஷப, துலா, மகர, கும்ப லக்னத்தாருக்கு ஏற்ற ஸ்தலம்.

### மிதுன லக்னத்தாருக்கு:

சகல யோகத்தையும் அளிக்கும் ஸ்தலம்.

### ரிஷப லக்னத்தாருக்கு:

ஆன்ம பலம் தரும்.

### துலா லக்னத்தாருக்கு:

ஆன்ம பலம் ஏற்படும்.

### மகர லக்னத்தாருக்கு:

புத்ர பாக்யம், தொழில் விருத்தி ஏற்படும்.

### கும்ப லக்னத்தாருக்கு:

வீடு, மனை, கல்வி இவற்றில் சிறப்பும், செல்வம், புகழ் அந்தஸ்து ஏற்படும்.

**மற்ற லக்னத்தார்கள் ஆலோசனை கேட்டு பிறகு செல்லவும்.**

மேற்படி ஆலயத்திற்கு செல்லும் பொழுது கிரக சக்தியை ''பிராணா'' முறையில் ஈர்த்து பூவில் செலுத்தி கோவில் மூலவருக்கு செலுத்தவும்.

## புதன்

மதுரை மீனாட்சி அம்மன் ஸ்தலம்

திருவெண்காடு
(மாயவரம் அருகில்)

மிதுன, சிம்ம, துலா, மகர ரிஷப லக்னத்தாருக்கு ஏற்ற ஸ்தலம்.

**மிதுன லக்னத்தாருக்கு:**

ஆன்ம பலம், வீடு, வண்டி, வாகனம் இவற்றில் சிறப்பு உண்டாகும்.

**ரிஷப லக்னத்தாருக்கு:**

தனம், வாக்கு வன்மை, ஞாபக சக்தி ஏற்படும்.

**துலா லக்னத்தாருக்கு:**

பிதுர் வழி சிறப்பு, செல்வம், அந்தஸ்து ஏற்படும்.

**மகர லக்னத்தாருக்கு:**

செல்வம், செல்வாக்கு பிதுர்வழி சிறப்பு ஏற்படும்.

மேற்படி ஸ்தலத்திற்கு செல்லும் பொழுது கிரக சக்தியை ''பிராணா'' முறையில் ஈர்த்து வலது கை சுண்டு விரல் வழியே பூவில் செலுத்தி கோவிலின் மூலவருக்கு செலுத்தவும்.

மேற்படி ஆலயம் தவிர பிற ஆலயங்களுக்கு செல்பவர்கள் கீழ்க்கண்ட முறைப்படி சென்றால் மிக மேன்மையான பலன்கள் உண்டாகும்.

**மேஷ லக்னத்தார்கள்**

திங்கள், வெள்ளி, சனி மற்றும் புதன் கிழமைகளில் ஆலயம் செல்வதை தவிர்க்கவும்.

மற்ற தினங்களில் செல்வது உத்தமம்.

**ரிஷப லக்னத்தார்கள்**

வியாழன், திங்கள், செவ்வாய் கிழமைகளில் ஆலயம் செல்வதை தவிர்ப்பது நன்று. மற்ற நாட்களில் ஆலயம் செல்வதும் விரதமிருப்பதும் நன்று.

**மிதுன லக்னத்தார்கள்**

ஞாயிறு, திங்கள், செவ்வாய் கிழமைகளை ஆலயம் செல்வதை தவிர்க்கவும். பிற நாட்களில் செல்லலாம்.

**கடக லக்னத்தார்கள்**

புதன், வெள்ளி, சனி கிழமைகளை ஆலயம் செல்வதை தவிர்க்கவும். மற்ற நாட்களில் செல்லலாம்.

**சிம்ம லக்னத்தார்கள்**

திங்கள், வியாழன், சனி கிழமையை தவிர்க்கவும். மற்ற நாட்களில் செல்லவும்.

**கன்னி லக்னத்தார்கள்**

ஞாயிறு, செவ்வாய் கிழமைகளை தவிர்க்கவும். பிற நாட்களில் செல்லலாம்.

## துலா லக்னத்தார்கள்

ஞாயிறு, செவ்வாய், வியாழன் தவிர்க்கவும். பிற நாட்கள் நன்று.

## விருச்சிக லக்னத்தார்கள்

புதன், வெள்ளி, சனி தவிர்க்கவும். மற்ற நாட்களில் செல்லலாம்.

## தனூர் லக்னத்தார்கள்

திங்கள், புதன், வெள்ளி, சனி தவிர்க்கவும். மற்ற நாட்கள் உகந்தது.

## மகர லக்னத்தார்கள்

ஞாயிறு, திங்கள், செவ்வாய், வியாழன், தவிர்க்கவும் பிற நாட்கள் நன்று.

## கும்ப லக்னத்தார்கள்

ஞாயிறு, திங்கள், செவ்வாய், வியாழன் தவிர்க்கவும். பிற நாட்கள் நன்று.

## மீன லக்னத்தார்கள்

ஞாயிறு, வெள்ளி, சனி தவிர்க்கவும். பிற நாட்கள் நன்று.

ஏனெனில் பூமியில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கிரக சக்திகள் உள்ளன. எனவே நமக்கு எந்த கிரக சக்தி நன்மையைத் தருமோ அக்கிரக சக்தி உள்ள கிழமைகளில் ஆலயம் செல்வது மிகவும் உயர்ந்த பலனை அளிக்கும்.

எந்த ஆலயங்களுக்கு சென்றாலும் கிரக சக்தியை ஈர்த்து ''பிராணா''
முறையில் பூமாலை செலுத்தி ஆலயத்திலுள்ள மூலவருக்கு அணிவிக்கவும்.
இதன் மூலம் மூலவர் சிலையில் உறையும் கிரக சக்தியானது நம்முள்ளும்
உறையும். அவ்வாறு உறையும் கிரக சக்தியானது அதே சக்தியுடைய மனித
உறவுகளை நமக்கு ஏற்படுத்தி பலவகையில் நாம் மேன்மையடைய உதவும்.


## NAME CHART அமைக்கும் முறை

கீழ்க்கண்ட ஒவ்வொரு ஆங்கில எழுத்தும் அந்த எழுத்து ஒடுங்கும் எண்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இம்முறை கிரேக்கர்களின் ஹீப்ரு முறை (Hebrew Method) எண் கணித மதிப்பீடு முறையை அடிப்படையாக கொண்டது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | F | G | H | I |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| J | K | L | M | N | O | P | Q | R |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| S | T | U | V | W | X | Y | Z | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | |

### A.ARUN

இதில் A எனும் initial 1-ஆம் கட்டத்தில் அமைக்கப்பட்டது.





**A** - எனும் பெயரின் முதல் எழுத்தும் 1ஆம் கட்டத்தில் அமைக்கப்பட்டது.

**R** - எனும் எழுத்து A - எழுத்து உள்ள கட்டத்திலிருந்து 9-ஆம் இடத்தில் அமைக்கப்பட்டது.

**U** - எனும் எழுத்து R எழுத்திலிருந்து மூன்றாம் இடத்தில் அமைக்கப்பட்டது.

**N** - எனும் எழுத்து U -விலிருந்து 5-ஆமிடத்தில் அமைக்கப்பட்டது.


## உதாரணம் II




K.RAMAN எனும் பெயருக்கான Name Chart
K.R A M A N
2 9 1 4 1 5 - எண்கள் ஹீப்ரு முறை
மேஷ லக்னம் தான் முதல் கட்டம் என்பதை மறந்து விடாதீர்கள்.
2-ஆமிடத்தில் K
K - விலிருந்து ஒன்பதாம் இடத்தில் R
R - விலிருந்து 1 ஆம் இடத்தில் A
A - விலிருந்து 4 ஆம் இடத்தில் M
M - மிலிருந்து 1 ஆம் இடத்தில் A
A - விலிருந்து 5 ஆம் இடத்தில் N


## உதாரணம் III

R. VINCENT எனும் பெயருக்கான NAME CHART
R. V I N C E N T (ஹீப்ரு முறை)
9 4 9 5 3 5 5 4




R 9-ஆமிடத்தில்
R - இருக்கமிடத்திலிருந்து 4-ஆமிடத்தில் V
V - இருக்கும் 9-ஆமிடத்தில் I
I - இருக்கும் 5ஆமிடத்தில் N
N - எழுத்திலிருந்து 3-ஆமிடத்தில் C
C - எழுத்திலிருந்து 5-ஆமிடத்தில் E
E - எழுத்திலிருந்து 5-ஆமிடத்தில் N
N - எழுத்திலிருந்து 2-ஆம் இடத்தில் T

## உதார ணம் IV




P.KATHIR எனும் யெருக்கான Name Chart

P. K A T H I R (ஹீப்ரு முறை)

P - ஏழாம் இடத்தில்

P - யிலிருந்து 2-ஆமிடத்தில் K

K - யிலிருந்து 1-ஆமிடத்தில் A

A - யிலிருந்து 2-ஆமிடத்தில் T

T - யிலிருந்து 8-ஆமிடத்தில் H

H - யிலிருந்து 9-ஆமிடத்தில் I

I - யிலிருந்து 9-ஆமிடத்தில் R

இனி நீங்களே Name Chart அமைத்துக் கொள்ளலாம். Name Chart அமைக்கும் பொழுது கவனிக்க வேண்டிய விதிமுறைகளை (15-தினங்களில்) புத்தகத்தல் ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது அதனை படித்து புரிந்து கொண்டு பிறகு அமைக்கவும்.

**அவசியமான குறிப்பு:-**

1. Name Chart அமைக்கும் பொழுது 6, 8, 12 ஆமிடத்தில் எழுத்துக்கள் வராதவாற அமைத்துக் கொள்ளுங்கள்.

2. Name Chart அமைக்கும் பொழுது 1, 5, 9, 10, 11 ஆம் இடங்களில் எழுத்துக்கள் வருமாறு அமைத்துக் கொள்வது மிகவும் யோகமளிக்கும்.

சுபம்

## Name Chart அமைக்கும் முறையின் பின்னணியில் உள்ள சில அறிவியல் பூர்வமான உண்மைகள்:-

நாம் பிறந்த லக்னத்திற்கு யோகம் தரும் கிரகங்கள் 6, 8, 12-இல் மறைந்து இருந்தாலோ அல்லது அக்கிரகங்கள் நீச்சமடைந்து இருந்தாலோ அத்தகைய கிரக சக்திகள் நாம் பூமியில் பிறந்த நாளில் மிக குறைவாக இருந்தது என்று அர்த்தம்.

மேற்ப்படி கிரக சக்திகள் நம் உடலில் இணைந்தால் நமக்கு நன்மை ஏற்படும். அதனால் அத்தகைய கிரக சக்தியை ஆகர்ஷணம் செய்யும் எழுத்துக்களை நம்பெயரில் சரியான முறையில் பொருத்திக் கொண்டால் நம் பெயர் எப்பொழுதெல்லாம் கூப்பிடப்படுகிறதோ அப்பொழுதெல்லாம் நமக்கு நன்மை ஏற்படும். அவ்வாறு நம் உடலில் இணையாத யோகமான கிரக சக்திகளை பெயரில் எந்த முறையில் பொருத்துவது என வழிகாட்டும் முறைதான் கிரேக்கர்கள் கண்டறிந்த Name Chart முறையாகும்.

சிலருக்கு இயற்க்கையாக பெயர் சிறப்பாக அமைந்துவிடும். மற்றவர்கள் இம்முறைப்படி அமைத்துக்கொண்டு நலம் பெறலாம். Name Chart அமைக்கும் பொழுது நம் லக்னத்திற்கு யோகம் தராத கிரக சக்தியை ஆகர்ஷணம் செய்யும் எழுத்துக்களை பெயரில் தவிர்க்க வேண்டும். பெயரில் உள்ள எழுத்துக்களை எந்த முறையில் அமைத்துக் கொள்வது என வழிகாட்டும் கலையே ஹீப்ருக்கள் கண்டறிந்த Name Chart முறையாகும்.

## NAME CHART - விளக்கம்

A - சூரியனின் கிரக சக்தியை ஆகர்ஷணம் செய்யும் எழுத்து. சிம்ம லக்னம், விருச்சிக லக்னம், மேஷ லக்னம் - முதலிய லக்னங்களில் பிறந்தவர்கள் பெயரில் இந்த எழுத்தினை Name Chart-யில் 1,9,10,11 - ஆம் இடத்தில் வருமாறு அமைத்துக்கொண்டால் மிகுந்த யோகமளிக்கும்.

மகர லக்னம், மிதுன லக்னம், மீன லக்னம், கன்னி லக்னம் முதலிய லக்னத்தில் பிறந்தவர்கள் மேற்படி எழுத்தினை பெயரில் தவிர்ப்பது நல்லது.

மற்ற லக்னத்தாரை விட சிம்ம லக்னத்தாருக்கு பெயரின் முதல் எழுத்தாக வந்தால் மிகுந்த யோகமளிக்கும்.

J - ஆண், பெண் தன்மைகளை உள்ளடக்கிய எழுத்து சூரியன் மற்றும் சுக்கிரன் சக்தியை ஆகர்ஷணம் செய்யும் எழுத்து.

ஆண்களுக்கு இந்த எழுத்து பெயரின் முதல் எழுத்தாக வந்தால் பெண் தன்மை உடலில் ஏற்பட வாய்ப்புண்டு.

இந்த எழுத்து பெயரின் முதல் எழுத்தாக வரும் பெண்களுக்கு ஆண்கள் போன்ற வீர்யம் உண்டாகும்.

பெண்களுக்கு இந்த எழுத்து முதல் எழுத்தாக வந்தால் ஆண் துணையின்றி வாழ நேரிடும். ஏனெனில் ஆண் துணையே தேவையில்லை என்ற நிலையை இந்த எழுத்து ஏற்படுத்தும்.

இந்த எழுத்து சூரியன், சுக்ரன் கிரக சக்தியை ஆகர்ஷணம் செய்வதால் சூரியனின் சக்தியினால் சுக்ர சக்தியின் வீர்யம் உடலில் குறைந்துவிடும்.

I - சூரியன் மற்றும் சனிகிரக சக்தியை ஆகர்ஷணம் செய்யும் எழுத்து.

சூரியன், சனி இணைவில்தான் 18 - என்ற போர்களத்தை குறிக்கும் எண் உருவாகிறது.

இந்த எழுத்தை பெயரின் முதல் எழுத்தாக கொண்டிருக்கும் சிம்ம லக்னத்தில் பிறந்தவர்கள் உடலின் இடது பகுதியில் பாதிப்பும் குரூரமான புத்தி உடையவர்களாக இருப்பார்கள்.

இந்த எழுத்து ஆகர்ஷணம் செய்யும் கிரக சக்திகள் உடலை நோய் படச்செய்யும்.

மிகுந்த மனோ தைரியத்தை தரும் எழுத்து அதே சமயம் உயிருக்கு ஆபத்தானவர்களை ஆகர்ஷணம் செய்து அதன்மூலம் பாதிப்படைய செய்யும் எழுத்து.

Q - சூரியன் மற்றும் செவ்வாய் கிரக சக்தியை ஆகர்ஷணம் செய்யும் எழுத்து.

மிக உன்னதமான ஆகர்ஷண சக்தியை கொண்ட எழுத்து.

சிம்மம், விருச்சிகம், மேஷம் முதலிய லக்னத்தாருக்கு சிறப்பான பலனை அளிக்கும்.

Y - சூரியன் கேது குரு கிரக சக்திகளை ஆகர்ஷணம் செய்வதால் மிக மேன்மையான பலனை தரும் எழுத்து.

மேஷ லக்னத்திற்கு மிகுந்த யோகம் தரும் எழுத்து.

B - சந்திரனின் ஆகர்ஷ்ணம் உடைய எழுத்து.

கடகம், கன்னி, துலாம், விருச்சிகம், மீனம் - முதலிய லக்னத்தாருக்கு மிகவும் யோகம் தரும் எழுத்து.

K - சந்திரனின் ஆகர்ஷ்ணம் உடைய எழுத்து. மேற்கூறிய லக்னத்தாருக்கு பொருந்தும்.

R - சந்திரன் மற்றும் செவ்வாய் கிரக சக்தியை ஆகர்ஷ்ணம் செய்யும் எழுத்து. சசிமங்கள் யோகம் உடைய எழுத்து. கடகம், விருச்சிகம், மீனம் - முதலிய லக்னத்தாருக்கு ஏற்றம் தரும்.

C - குருவின் கிரக சக்தியை ஆகர்ஷ்ணம் செய்யும் எழுத்து. மத்திமமான பலன்தரும் எழுத்து.

G - குருவின் கிரக சக்தியை ஆகர்ஷ்ணம் செய்யும் எழுத்து.

தனுர், மீனம், மேஷம், விருச்சிகம் லக்னத்தாருக்கு மிகுந்த யோகமளிக்கும் எழுத்து.

L - தீய சக்திகளை ஆகர்ஷ்ணம் செய்யும் எழுத்து. இந்த எழுத்திற்கு பின் K,G எனும் எழுத்து வந்தால் மட்டும் நன்று. இல்லையேல் மிக மோசமான வாழ்க்கை வாழவேண்டியிருக்கும்.

இந்த எழுத்திற்கு முன் W, V வருவது சிறப்பு. மற்றபடி தவிர்க்க வேண்டிய எழுத்து. இந்த எழுத்தை பெயரில் உடையவருக்கு கேது திசை வந்தால் பேய், ஆவி, தீயசக்தி தொல்லைகளுக்கு ஆளாக வேண்டியிருக்கும்.

S - விஷங்களை ஆகர்ஷ்ணம் செய்யும் எழுத்து. தவிர்ப்பது நன்று. உடலில் விளக்கடி, அலர்ஜி இருப்பவர்கள் இந்த எழுத்தை பெயரிலிருந்து நீக்கினால் உடனே பூரண குணம் அடையலாம்.

D - மின்னல், இடி போன்ற இயற்கை சீற்றங்களை ஆகர்ஷ்ணம் செய்யும் எழுத்து. மின்சாரம் சம்பந்தப்பட்ட பணிகளில் உள்ளவர்கள் பெயரில் இந்த எழுத்தை தவிர்க்கவும். பெயரில் இந்த எழுத்தை கொண்டவர்களுக்கு ராகு திசை மிகவும் கொடிய பலனை செய்யும். தவிர்க்க வேண்டிய எழுத்து.

M - மத்திமமான எழுத்து. பெயரில் ஆரம்பத்திலும் முடிவிலும் இவ்வெழுத்து வருவது சகல தோஷத்தை ஏற்படுத்தும். (மாணிக்கம்)

T - மனித அளவிற்கு எட்டாத சப்தங்களை உள்ளடக்கியது. விவரிப்பதில் அவசியமில்லை.

E - புதன் கிரக சப்தத்தை ஆகர்ஷ்ணம் செய்யும் எழுத்து. மிதுனம், துலாம், கன்னி, மகரம் முதலிய லக்னக்காரர்கள் தவிர மற்றவர்கள் இந்த எழுத்தை பெயரில் சேர்த்தால் நரம்பு மண்டலம் பலஹீனமடையும்.

மேற்படி லக்னத்தாருக்கு பூரண யோகம் தரும் எழுத்து.

N - விருச்சிகம், மேஷம், கடகம் முதலிய லக்னத்தில் பிறந்தவர்களுக்கு நரம்பு பாதிப்பு ஏற்படுத்தும். மற்றவர்கள் தவிர்ப்பது நல்லது. எதிர்மறை சப்தம் உடைய எழுத்து.

H - லக்னத்திற்கு சனியோக கிரகமாக வருபவர்கள் இந்த எழுத்தை பயன்படுத்துவது மிகவும் ஏற்றது. மற்றவர்களுக்கு மத்திம பலன்களை ஏற்படுத்தும் எழுத்து.

X - ஆராய்ச்சி செய்பவர்களுக்கு மிகவும் ஏற்ற எழுத்து.

U - சிறப்பான எழுத்து. தனுர், மீன லக்னக்காரர்க்ள தவிர்ப்பது நல்லது.

V - அற்புதமான எழுத்து. தனுர், மீன லக்னத்தாரை தவிர.

W - அற்புதமான எழுத்து. தனுர், மீன, மேஷ லக்னத்தார் தவிர்க்கவும்.

"O" - சூட்சுமமான சக்திகளை ஆகர்ஷணம் செய்யும் எழுத்து. பிரணவ நாடியில் முதல் எழுத்து. ஒன்பது கிரகங்களுக்கு அப்பாலுள்ள கிரக சக்தியை ஆகர்ஷணம் செய்யும் எழுத்து. ஆகையால் இவ்வெழுத்து பெயரில் ''ஓ'' எனும் உச்சரிப்புடன் ஆரம்பித்தாலோ, முடிந்தாலோ சரீரம் பாதிப்படையும். சூட்சும உலோகங்களை ஆய்வு செய்பவர்கள் மேற்படி எழுத்தை பெயரில் சேர்த்துக் கொள்வது நன்று. மற்றவர்கள் தவிர்க்கவும்.

"Z" - மிருகங்களை ஆகர்ஷணம் செய்யும் எழுத்து. காடுகளில் பணிசெய்வோர் இந்த எழுத்தை பெயரில் தவிர்ப்பது நன்று. இல்லையெனில் வனவிலங்குகளால் தொல்லைகள் நேரிடும்.

P - சனி யோக கிரகமாக உடைய லக்னத்தார் பெயரில் அவசியம் சேர்க்க வேண்டிய எழுத்து. மற்றவர்கள் த்விர்க்கவும். மிக அற்புதமான எழுத்து.

F - போர்களங்களை குறிக்கும் எழுத்து. இராணுவத்தில் பணிபுரிவோர் பெயரில் சேர்த்துக் கொண்டால் மிகுந்த தைரியம் ஏற்படும். மற்றவர்கள் தவிர்க்கவும்.

''துலா லக்னத்தில் பிறந்து பெயரில் C G L S எனும் எழுத்து முதல் எழுத்தாக வந்தால் என்றும் கடனாளியே''.

''7, 16, 25 - தேதியில் பிறந்த ஆண் இதே தேதியில் பிறந்த பெண்ணை திருமணம் செய்தால் புத்ரபேறு ஏற்படாது.

DI, DHI, DIE, D - எனும் சப்தம் பெயரில் வந்தால் ராகு திசை வரும் காலத்திலோ அல்லது ராகுதிசை நடப்பவனாலோ இடி போன்ற சம்பவம் நிகழும்.

INDIRA GANDHI

RAJIV GANDHI

SANJAY GANDHI

DIVYA BHARADHI (ஹிந்தி நடிகை)

KING DIPENDRA

KING DIRENDRA

IDIAMIN

KENNEDY

JUNIOR KENNEDY

DIANA

DODI

பெயரில் L, ILL, LO, - போன்ற எழுத்து வந்தால் கேது திசையில் எதிர்மறை தீயசக்திகளால் பாதிப்பு ஏற்படும். உடல் பாதிப்பு ஏற்படும்.

VALLI

SELVI

MALLIGA

LOGU

LOGANATHAN

ILLANGO

ILLAVARASU

IRULLAPPAN

SELLAPPAN

MALATHI

கேது திசை வராதவரை பாதிப்பு ஏற்படாது. ஆனால் கேதுதிசை வீட்டில் யாருக்காவது நடந்தாலும் பாதிக்கும். ஜாதகத்தில் சனி நீசம் பெற்றோ அல்லது 6, 8, 12-ல் மறைந்தோ இருந்தால் உடம்பில் கால்சியம் சக்தி குறையும்.

சனி என்ற கிரக சக்தி மிக குறைவான நாளில் பிறந்தவர்கள் சந்தர்ப்ப வசத்தால் பல்மருத்துவம் ஆகிவிட்டால் அவரை நாடிவரும் பல் நோயாளிகளின் உடம்பில் உற்பத்தியாகும் மொத்த கால்சியமும் (மேற்படி டாக்டர் அருகில்) நின்றுவிடும். பற்களை பிடுங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். தலைவலி போய் திருகு வலி வந்த கதைதான் ஏற்படும். சனி உச்சமாக உள்ள பல் மருத்துவர் அருகாமையில் விழும் நிலையில் இருக்கும் பல் கூட பலம் பெறும்.

ஏனெனில் சனி கிரக சக்தி அதிகமுடைய மனிதனின் அருகாமையில் செல்பவரையும் மேற்படி கிரகசக்தி தாக்கம் செலுத்தி உடலில் கால்சியத்தை உற்பத்தி செய்ய வைத்து அதன்மூலம் பற்கள் பலப்பட்டு விடும்.

மற்றபடி கிரகங்களால் பிணைக்கப்பட்டுள்ள மனித சரீரம் மருந்திகளெல்லாம் குணமாவது வெறும் 5% மட்டுமே. சந்திரனின் கிரக சக்தி குறைவாக உள்ள நாளில் பிறந்தவர்கள் மூன்று வேளையும் மோர் உணவை சாப்பிட்டாலும் அல்சர் ஏற்படுவதை தவிர்க்க முடியாது.

மேற்படி சந்திர கிரக சக்தியை அதிகம் உடைய மனிதரை (அல்லது) மருத்துவரை அடிக்கடி சந்தித்தால் மேற்படி பிரச்சனை தீரும். மேற்படி கிரக சக்தியை உடலில் இணைத்தாலும் அல்சர் குணமாகிவிடும். ஆனால் ஜனன ஜாதகத்தில் சந்திரன் சுபகிரகமாக இருக்க வேண்டும். இல்லாவிடில் இக்கிரக சக்தியை இணைத்து அல்சரை சரிசெய்யலாம். ஆனால் வேறு பிரச்சனை வரும் என நினைவில் கொள்க.

தேவதை வசியம்

அரசமர குச்சி (சமித்து)

வேப்பமர குச்சி (சமித்து)

வெள்ளெருக்கு குச்சி (சமித்து)

வில்வமர குச்சி (சமித்து)

பசும் சாணம்

மேற்படி குச்சிகளை பசும் சாணத்தில் வைத்து பசுநெய்விட்டு எரியூட்டவும். மேற்படி எரிந்த சாம்பலை புனுகு, பச்சை கற்பூரம், குங்கிலியம், சாம்பிராணி, கோரோசனை, பன்னீர், சந்தனம் இவைகளுடன் கல்வத்தில் இட்டு இடித்து உலர்த்தி அவற்றை எடுத்து அதில் சூரிய உதயத்திற்கு முன்பு ''பிராணா'' முறையில் பூமியில் உள்ள சக்தியை ஈர்த்து ஆள்காட்டிவிரல் வழியே அதில் செலுத்தி அவற்றை எடுத்துச்சென்று புண்ணிய நதியில் பிரம்ம முகூர்த்தத்தில் கலக்கவும். அவ்வாறு செய்யும் பொழுது கிழக்கு முகமாக நின்று செய்யவும். புண்ணிய நதிக்கரையில் உலாவும் ஏதாவது ஒரு தேவதை உங்கள் உதவிக்கு ஓடோடி வரும்.

இதனை சூரிய உதயத்திற்கு முன் 4½ - 5 மணிக்குள் செய்யவும். இதனை செய்த பிறகு மது, புகையிலை போன்ற தீய பழக்கங்கள் அறவே கூடாது. இதனை செய்வதற்கு 48 நாட்கள் முன்னர்வரை தினமும் இருவேளை இயற்கை உணவு அவசியம்.

மேற்படி தேவதை வசயிம் ஆகியுள்ளதா என உணர்ந்து கொள்ளலாம். அது முதல் நீங்கள் சொன்னது பலிக்கும் அதுதான் அதற்கு சாட்சி. ஏன் அப்படி நிகழ்கிறது என்ற காரணம் ரகசியமானது. மேலும் தீயசக்திகளையும் வசப்படுத்த சிலர் முனைவார்கள் எனவே இத்துடன் நிற்க''.

மூன்று வேளையும் சமைத்த உணவை உண்பவர்களுக்கு மேற்படி தேவதை வசியம் சாத்தியப்படாது.

இயற்கை உணவு (சமைக்காத உணவு) (கனி, பழச்சாறு, பச்சை காய்கறிகள் முதலியன)

சாப்பிடுபவர்களின் உடம்பில் பஞ்சபூத சக்திகள் சமன்படும் இச்சக்திகள் சமன்படும் நிலையில்தான் அரூப நிலையிலுள்ள தேவதையை புரிந்து கொள்ள முடியும்.

தேவதை தரும் செய்திகள் உணர்வின் மூலம் உணர்த்தப்படும். அதற்கு நம் உடம்பை (ஊண் உடம்பை) ஆலயமாக மாற்றி வையுங்கள். மற்றவை தானே நிகழும்.

சமைத்து உண்ணும்பொழுது உடலின் பஞ்சபூத சக்தி பாதிப்படையும். இதனை ஏகாதசி, கருட பஞ்சமி, புண்ணிய தினங்களில் சூரிய உதயத்திற்கு முன் செய்யவும்.

அரூப நிலையிலுள்ளவைகளை புரிந்துகொள்ள வேண்டுமானால் நம் உடலில் உள்ள பஞ்சபூத சக்தியை இயற்கை உணவின் மூலம் சமன் செய்து மேற்படி சூட்சும உலகின் ரகசியங்களை அறியலாம்.

ஆவிகளை காணும் முறை மற்றும் அவற்றின் உதவியினை பெறும் வழிகளும் :-

''48 நாட்களுக்கு மூன்று வேளையும் சமைக்காத இயற்கை உணவுகளை உண்டு வரவேண்டும்''.

அவ்வாறு இயற்கை உணர்விற்கு மாறும்பொழுது நம் உடல் சூட்சும உலகங்களை புரிந்து கொள்ளும் தகுதியை அடையும்.

அதற்கு பிறகு வடக்கு திசை நோக்கி மதியம் 12 மணியளவில் பேனாவை பேப்பரின் மேல் வைத்து புண்ணியலோக ஆவிகள் தொடர்பு கொள்ள வேண்டும் என பிரார்த்தனை செய்யவும்.

அதன்பிறகு உங்கள் உள்மனதில் தோன்றுவதையெல்லாம் பேப்பரில் எழுதுங்கள். பிறகு அவற்றை படித்துப் பாருங்கள். அவற்றிலிருக்கும் செய்தி மிக வித்தியாசமாக இருக்கும்.

இதேபோல அடிக்கடி செய்து வாருங்கள். பிறகு உங்கள் கைகளே தானாக பேப்பரில் எழுதுவதை கண்டு ஆச்சர்யப்படுவீர்கள். அதன் பிறகு ஆவிகளிடம் உரையாடி மகிழுங்கள்.

சில பேருக்கு கைகள் தானாக எழுதும் சிலபேருக்கு அந்த நேரத்தில் உள்ளுணர்வில் தோன்றுவதை அவர்களே சிரத்தையெடுத்து எழுதிக்கொள்ளவேண்டியதுதான்.

சூட்சும உலகில் சஞ்சாரம் செய்யும் ஆவிகளின் உரையாடல் நமக்கு உள்ளுணர்வு மூலமே புலப்படும் அத்தகைய உள்ளுணர்வு எண்ணங்கள் நம்முடையது அல்ல என்று நீங்களே போகப் போக உணர்வீர்கள். அத்தகைய உள்ளுணர்வு மிக நல்ல நிலையில் செயல்படும் காலமே மிக சிறந்த நிலை.

மேலும் உங்கள் உள்ளுணர்வு மூலம் தொடர்புகொள்ளும் ஆவிகள் பெரும்பாலும் உங்களின் உடல் அதிர்வுக்கு ஏற்றார்போலவே இருக்கும்.

உங்களைப் போலவே எண்ணம், குணம், சிந்தனை உடைய காலம் சென்ற மனித ஆவிகளின் தொடர்புதான் உங்களுக்கு ஏற்படும்.

மிக சிறந்த ஆவிகளின் தொடர்புகள் கிடைப்பது அவரவர் உடல் மின்காந்த நிலைக்கேற்ப்பவே அமையும்.

இதனை எழுதிப் புரிய வைப்பது கடினத்திலும் கடினம். எனவே ஆர்வம் உடையவர்களுக்கு பேசுவதற்கு பயிற்சியே தருகிறோம். கட்டணம் பற்றி கவலையில்லை, ஆர்வமிருந்தால் போதும்.

உங்களின் உள்ளுணர்வு மூலம் தொடர்பு கொள்ளும் அத்தகைய ஆவிகளை அவைகள் விரும்பினால் நாம் பார்க்கலாம்.

## ஆவிகள் மூலம் கிடைக்கும் உதவிகள் :-

உங்களை உள்ளுணர்வு மூலம் தொடர்பு கொள்ளும் ஆவிகள் பெரும்பாலும் உங்களின் மின்காந்த நிலைக்கேற்பவே இருக்கும். எனவே உங்களுடைய சில பிரச்சனைகளுக்கு அவைகளின் யோசனையே உங்களை அப்பிரச்சனையிலிருந்து காப்பாற்றும்.

எத்தகைய உதவி என்பதை அறுதியிட்டு கூற முடியாது. ஏனெனில் சில ஆவிகள் சிலருக்கு புதையல் இருக்குமிடத்தை கூட கூறி அவை கிடைக்க வழிசெய்திருக்கிறது.

என்னுடைய யோசனையெல்லாம் முதலில் உங்கள் உடம்பை இயற்கை உணவிற்கு தயார்படுத்துங்கள். அப்பொழுது உடலின் பஞ்ச பூத சக்திகள் சமன்படும் அதன் மூலம் புண்ணிய லோக ஆவிகள் தொடர்பு எளிதில் அமையும். இல்லையெனில் மற்ற உலகை சார்ந்த ஆவிகளினால் எவ்வித நம்மையுமில்லை.

## மாந்திரீகத்தின் பின்னனி உண்மைகள் :-

மனித பிண்டத்தை ஒன்பது கிரகசக்திகள் இயக்குகிறது. மனித உடலை இயக்கும் கிரகசக்தியை எதிர்மறை சக்தியுடைய ஒன்றில் இணைத்து மனித உடலை பாதிக்கச் செய்யும் செயலே மாந்திரீகம் ஆகும்.

இதனால் பாதித்தவர்கள் அவர்கள் உடலை இயக்கும் யோகமான கிரக சக்தியை அதிகப்படுத்தினாலே மாந்திரீகம் என்பது செயலிழக்கும். எவ்வளவு கடுமையான மாந்திரீக பாதிப்பாக இருந்தாலும் கிரக சக்தியை அதிகப்படுத்துவதன் மூலம் சரிசெய்துவிட முடியும்.

## பஞ்சாங்கத்தின் பொருள் :-

பஞ்ச பூதமான நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனும் சக்தியைப் பற்றி சொல்வதே பஞ்ச அங்கம் ''பஞ்சாங்கம்'' ஆகும்.

பூமியை சுற்றியுள்ள இராசிமண்டலங்கள் அம்மண்டலத்தை ஆளும் கிரகங்கள் அக்கிரக சக்தி பூமியில் உள்ள நேரங்கள் அவை ஏற்படுத்தும் தாக்கங்கள் இவைகளைப் பற்றி அறிய உதவும் நூல் பஞ்சாங்கம்.

ஆனால் பெரும்பாலானோர்க்கு பஞ்சாங்கம் என்பது என்னவென்றே தெரிவதில்லை. அதற்கு காரணம் இன்று வெளிவரும் அனைத்து பஞ்சாங்கங்களும் அறிவியல் பின்னணியை உள்ளடக்கவில்லை என்பதே காரணம்.

## திதி என்பது :-

ஒரு கிரகசக்தி மிக அதீதமாக பூமியில் உள்ள நாளை குறிக்கும். உதாரணமாக சஷ்டிதிதி என்றால் சுக்கிரனின் கிரக சக்தி பூமியில் அதீதமாக உள்ள நாள் என்று அர்த்தம். (திதிகள் பற்றி - 15 தினங்களில் செல்வ வளமை தரும் பிரபஞ்ச ரகசியம்'') எனும் நூலில் மிகவும் விளக்கமாக கூறியுள்ளேன்.

## நட்சத்திரம் என்பது :-

இரண்டு கிரகசக்தி ஒன்றாக இணைந்து பூமிக்கு வரும் நாள். இதனைத் தான் நம்மவர்கள் நட்சத்திரம் என குறித்து வைத்துள்ளனர்.

உதாரணமாக பரணி நட்சத்திரம். ஃப்ர - என்றால் சுக்கிரனை குறிக்கும். ண்ணீய் - என்பது செவ்வாயை குறிக்கும். இவ்விரு கிரகசக்தி பூமியில் உள்ள நாளை குறிப்பதற்கே ''பரணி'' எனும் சொல் வந்தது. பரணி நட்சத்திரத்தில் நோய்வாய்ப்பட்டவன் தேறமாட்டான் என்பது ஜோதிட மொழி ஏனெனில்

சுக்கிரன், செவ்வாய் கிரகசக்தி ஒருங்கே இண்ணந்த நாள்தான் பரணி என குறிக்கப்பட்டது. இதில் சுக்கிரனின் கிரகசக்தி விந்துவை இயக்குகிறது, செவ்வாய் கிரக சக்தி இரத்தத்தை இயக்குகிறது. எனவே மேற்படி நட்சத்திரத்தில் ஒருவனுக்கு நோய் ஏற்பட்டால் அவனுக்கு பிரச்னை உடலில் விந்துவிலும், ரத்தத்திலும் என்று அர்த்தம்.

எனவேதான் மேற்படி நாளங்களில் நோய்பட்டால் மீண்டுவர வெகு காலமாகும் என குறிப்பதற்கே பரணி நட்சத்திரத்தில் நோய்ப்பட்டான் தேறமாட்டான் என்ற சொல் வழக்கு வந்தது. இவ்வாறு ஒவ்வொரு கிரகமும் மற்றொரு கிரகத்துடன் நீர் ராசி, நெருப்பு ராசி, காற்று ராசி, உபய ராசி, மண் ராசி மண்டலங்களில் இணையும்பொழுது 27 வகையான ஒளிக்கதிர்கள் பூமி

யில் தர்க்கம் செலுத்துகின்றன என்று உணர்ந்தே 27 நட்சத்திரத்தினை வகுத்தார்கள். மற்றபடி வானில் உள்ள நட்சத்திரங்களைப்பற்றி சொல்லவில்லை.

கிரேக்க நாட்டு ஜோதிட வல்லுணர்கள் இணைந்து பூமியில் 9 கிரகங்களும் ஒன்றுடன் ஒன்று 27 வகையான தாக்கங்களை ஏற்படுத்துவதாகத்தான் சொல்லியிருக்கிறார்கள்.

### யோகம் என்பது :-

மூன்று கிரக சக்திகள் பூமியில் இருக்கும் நாள்தான் யோகம் என்பது.

9 கிரகங்களில் ஒவ்வொரு கிரகமும் மற்ற இரு கிரங்களுடன் இணையும் நிலையே யோகம் என குறிக்கப்பட்டுள்ளது.

### கரணம் என்பது :-

நான்கு கிரக சக்திகள் பூமியில் உள்ள நாள் அதாவது 4 கிரகங்கள் ஒன்றுடன் ஒன்று கேந்திர ஸ்தானங்களில் இணையும் நிலையே கரணம் என குறிக்கப்பட்டுள்ளது. நாள் என்பது அனைவரும் அறிந்ததே.

### ராகு காலம் என்பது :-

ராகு கிரகசக்தி பூமியில் தாக்கம் செலுத்தும் 1½ மணி நேரமே ராகுகாலம் எனப்படும்.

### எம கண்டம் :-

9 கிரக சக்திகளும் பூமியில் மிகவும் குறையும் நேரமே எம கண்டமாக சொல்லப்படுகிறது.

## எழுத்தாளர்களுக்கு

மணவளம், கற்பனா சக்தி, உத்வேகம், உற்சாகம் இவையெல்லாம் பெற சந்திரனின் கிரக சக்தியை உடலில் இணைத்து கொள்ளுங்கள்.

தனுர், மகர, கும்ப, சிம்ம லக்னத்தார் மேற்படி கிரக சக்தியை உடலில் இணைப்பதை தவிர்க்கவும்.

என்றுமே வாழ்க்கையில் கஷ்டப்படுபவர்கள்

வீட்டில் தினமும் சந்தியா காலத்தில் அக்னி ஹோத்திரம் செய்யுங்கள். வாழ்க்கை திசை மாறும். வீட்டில் அஷ்ட லக்ஷ்மி கடாட்சம் ஏற்படும்.

**பூவுடன் சேர்ந்த நார் :-**

இந்த பூமியில் பிறந்த எந்த மனித ஜாதகமும் அம்மனிதன் அமைத்துக்கொண்ட தொடர்பை பொருத்தே யோகமாகவோ, அவயோகமாகவோ மாறும்.

எப்பொழுதும் நல்ல கிரகசக்தியை உடைய ஜாதகனுடன் இணைந்து செயல்படு! தொட்டதெல்லாம் பொன்னாகும்.

''நீர் தீர்த்தமாவதும், சாக்கடையாவதும் சேரும் இடத்தை பொருத்து தான் அமையும்.''

**கலையை கற்றுக்கொள்.........**

உன் உடல் பிணைக்கப்பட்டுள்ள கிரக சக்தியைப் பற்றியும் அக்கிரக சக்தி பூமியில் ஏற்படுத்தும் தாக்கத்தையும் தெரிந்துகொள்ள தினம் 10 நிமிடமாவது செலவிடு.

உன்னை ஆளும் கிரக சக்தியைப் பற்றிய கல்வியை வாழ்க்கையில் முதலில் கற்றுக்கொள். அக்கல்வி உன்னை இறையுள் இணைக்கும் வரை உதவிடும்.

''உன்னை நீ அறிந்து கொள்ள ஜோதிடம் எனும் பாடம் படி''.

ஆயக்கலை 64

நீங்கள் எவ்வளவு பெரிய படிப்பாளியாக இருந்தாலும் 64 கலைகளில் ஏதாவது ஒன்றை கற்றுக்கொள்ளுங்கள்.

''தன்னை ஆளும் கிரக சக்தியை உணராதான் வாழ்க்கை மாண்ட மரத்திற்கு சமம்''

பெயரில் DI, DHI, D, DIE எனும் எழுத்தை உடையவர்கள் ராகுவின் கிரக சக்தி பூமியில் உள்ள நாளில் பாதிப்புக்கு உள்ளாவார்கள்.

**உண்மை சம்பவம் :-**

உலக உதை பந்தாட்ட கோப்பை போட்டியில் பங்கேற்ற ANDY RES ESCOBER எனும் வீரர் என்ற MEDILIN மைதானத்தில் 1-7-1994 அன்று சுட்டுக் கொள்ளப்பட்டார். இப்போட்டியில் விளையாடிய அணி அமெரிக்கா - கொலம்பியா. சுட்டுக்கொல்லப்பட்ட நாளின் கூட்டு எண் : 3+1=4.

5, 14, 23 தேதி மற்றும் தேதி, மாதம், வருடம் கூட்டி 5 எண் வரும் தினங்களில் மணம் புரிந்தவர்களுக்கு திடீர் மரணம் ஏற்படும்.

**ஆதாரம்**

பூலான் தேவி திருமண தேதி 5-7-1994 அன்று உமத்சிங் என்பவரை மணந்தார். 25-7-2001 அன்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

இது சம்பந்தமாக மேற்படி தேதியில் திருமணம் செய்து இறந்தவர்கள் பற்றிய ஆதாரங்களை ஆயிரக்கணக்கில் வைத்துள்ளோம்.

மேற்படி நாளில் திருமணம் செய்வதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

13-9-1999 எனும் தேதியில் திருமணமானவர்கள் நிறையபேர் விபத்தில் இறந்துவிட்டார்கள். இது பற்றிய ஆதாரங்களை தொகுத்து வைத்துள்ளோம்.

உங்களில் யாராவது மேற்படி தேதியில் திருமணம் செய்திருந்தால் உடனே மறுமாங்கல்யம் செய்து கொள்ளுங்கள்.

## 1, 10, 19, 28 தேதியில் பிறந்தவர்கள் :-

மேற்படி தேதியில் பிறந்து உங்களின் லக்னம் சிம்மம், விருச்சிகம், மேஷமாக இருக்குமானால் உங்கள் பெயரை 19, 37, 46, 55, 73 போன்ற ஏதாவது ஒரு எண்களில் அமைத்துக்கொள்ளுங்கள்.

சூரியன் கிரகசக்தியை ''பிராணா'' முறையில் உடலில் இணையுங்கள். மற்றவற்றை இயற்கை பார்த்துக்கொள்ளும்.

மேற்கூறியவர்கள் தவிர மற்றவர்கள் மேற்படி எண்ணில் பெயர் அமைப்பதும் சூரிய கிரக சக்தியை இணைப்பதும் கூடாது.

## 2, 11, 20, 29 தேதிகளில் பிறந்தவர்கள் :-

நீங்கள் பிறந்த லக்னம் கடகம் மற்றும் மீனமாக இருந்தால் மட்டும் உங்கள் பெயரை 56 என்ற எண் வரும்படி அமைத்துக் கொள்ளவும்.

பெயரின் முதல் எழுத்து "O" வருவது மிக விசேஷமான பலனைத்தரும். சந்திரகிரக சக்தியை பிராணா முறையில் உடலில் இணைத்துக் கொள்ளுங்கள்.

மேற்படி நாளில் ஜனித்தவர்கள் கேது லக்னத்திற்கு 3, 6, 11 ஆம் இடங்களில் இருந்தால் மட்டும் பெயரை 25 என்ற எண்ணில் அமைத்துக் கொள்ளலாம்.

## 3, 12, 21, 30 தேதியில் பிறந்தவர்களுக்கு :-

தனுர், மீன, கடகம், விருச்சிகள் முதலிய லக்னத்தில் ஜனித்தவர்கள் உங்களுடைய பெயரை 66 அல்லது 21 வரும்படி அமைத்துக்கொள்ளவும். பெயரின் முதல் எழுத்து G வருவது விசேஷ பலனளிக்கும்.

மற்ற லக்னத்தார்கள் மேற்படி எண்ணில் பெயர் அமைப்பது தோல் வியாதியைத் தரும்.

## 4, 13, 22, 31 - தேதியில் பிறந்தவர்கள்

நீங்கள் எந்த லக்னத்தில் ஜனித்திருந்தாலும் உங்கள் ஜென்ம லக்னத்திற்கு 3, 6, 11-ஆம் இடங்களில் ராகு அமையப்பெற்றிருந்தால் உங்கள் பெயரை 49 என்ற எண் வரும்படி அமைத்துக் கொள்ளவும்.

மற்றவர்கள் மேற்படி எண்ணில் பெயர் அமைப்பதை தவிர்க்கவும்.

மேற்படி தேதிகளில் ஜனித்தவர்கள் சிம்ம, விருச்சிக, மேஷ லக்னத்தாராக இருந்தால் பெயரை 19, 37, 46, 55, 73 வரும் எண்ணில் அமைத்துக் கொள்ளலாம்.

## 5, 14, 23 - தேதியில் பிறந்தவர்கள் :-

மிதுனம், துலாம், மகரம், கன்னி லக்னத்தில் பிறந்திருந்தால் பெயரை 32, 41, 59 என்ற எண் வருமாறு அமைத்துக் கொள்ளவும்.

23 - என்ற எண்ணில் பெயர் அமைப்பதாக இருந்தால் ஜனன ஜாதகத்தில் குரு, சந்திரன் இணைவு பெற்றிருக்க வேண்டும் அல்லது குருவிற்கு சந்திரன் கேந்திர, திரிகோண ஸ்தானத்திலாவது இருக்க வேண்டும் என்பதை கவனத்தில் வைக்கவும்.

மற்றவர்கள் மேற்படி எண்ணில் பெயர் அமைப்பதை தவிர்க்கவும்.

## 6, 15, 24 தேதியில் பிறந்தவர்கள் :-

மிதுனம், துலாம், கன்னி, மகரம், கும்பம் முதலிய லக்னங்களில் பிறந்தவர்கள் பெயரை 33, 42, 51, 69 என்ற எண்ணில் அமைத்துக் கொள்ளுங்கள். மற்றவர்கள் தவிர்க்கவும்.

மேற்படி எண்ணில் பெயர் அமைத்து சுக்கிரன் கிரக சக்தியை ''பிராணா'' முறையில் ஈர்த்து உடலில் இணைத்துக் கொள்ளவும்.

## 7, 16, 25 தேதியில் பிறந்தவர்கள் :-

ஜன்ம லக்னம் கடகமாக இருந்தால் பெயரை 56-ல் அமைத்து கொள்ளவும். சந்திர கிரக சக்தியை பிராணா முறையில் ஈர்த்து உடலில் இணைத்து கொள்ளுங்கள்.

மற்றவர்கள் தவிர்க்கவும்.

## 8, 17, 26 தேதியில் பிறந்தவர்கள் :-

துலாம், மகர லக்னத்தில் பிறந்தவர்கள் மட்டும் பெயரை 32 வருமாறு அமைத்துக் கொள்ளவும். மற்றவர்கள் தவிர்க்கவும்.

## 9, 18, 27 தேதியில் பிறந்தவர்கள் :-

விருச்சிகம், மேஷம், சிம்மம் ஆகிய லக்னங்களில் பிறந்தவர்கள் மட்டும் பெயரை 27, 45 வருமாறு அமைத்துக் கொள்ளுங்கள். மற்றவர்கள் தவிர்க்கவும்.

''உங்கள் ஜாதகத்தில் யோகம் தரும் கிரக சக்தியை உங்கள் உடலில் இணையுங்கள். பிறகு நீங்கள் என்றுமே அதிர்ஷ்டசாலிதான்''.